நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 10 | ஜூலை - ஆகஸ்ட் - செப் 1991 | விலை ரூ. 5/-


## காணாமல் போன

## ஜனநாயகம்

காணாமல் போனவர்களையும், இனந்தெரியாத ஆயுத பாணிகளால் கடத்தப்பட்டவர்களையும் பற்றிய தகவல்கள் நாளுக்கு நாள் வந்த வண்ணமேயுள்ளன. தெற்கில் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுகிற போது ஏதாவதொரு வழியில் தகவல்கள் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களுக்கு செல்கின்றன. வடக்கில் இடம் பெறும் 'கைது'கள் 'கடத்தல்'கள் காணாமல் போதல் பற்றிய விவரங்கள் முற்று முழுதாக வெளியே வருவதில்லை. நவீன சோழர்களான விடுதலைப் புலிகளின் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிகிறதோ இல்லையோ குறைந்தது மாதம் மூன்று பேராவது "காணாமல்" போய்விடுகிறார்கள்.

அண்மையில், புகழ் பெற்ற நாவலாசிரியரும், தீப்பொறி எனும் அமைப்பின் நிறுவனர்களில் ஒருவருமான கேசவன் (கோவிந்தன்) கொக்குவிலில் வைத்து தமிழீழவிடுதலைப் புலிகளினால் 'கைது' செய்யப்பட்டுள்ளார். இவருடைய கைதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் உட்பட மொத்தம் பத்துப்பேர் புலிகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கேசவன் ஆரம்பத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட் என்றும் அதனைச் சொல்லலாம்) நிர்வாகச் செயலாளராக இருந்தவர். எனினும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உட்கட்சி அராஜகங்கள், உட்கட்சிப் படுகொலைகள் என்பவற்றால் முரணுற்று வெளியேறியவர். தன்னுடைய புதியதோர் உலகம் எனும் நாவலில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அராஜகங்களைத் தெட்டத் தெளிவாகவும் பிரக்ஞை பூர்வமாகவும், கலாதரிசனத்துடன் வெளிக்கொணர்ந்தவர்.

வழமை போலவே, விடுதலைப் புலிகளால் 'கொண்டு' செல்லப்படுபவர்களைப் பற்றி எவ்வித தகவல்களையும் பெற முடியாது, அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பது பற்றிக் கூட ஒருவரும் கேட்க முடியாது. 'அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்' என்றோ அல்லது அவர்களை அரசியல் கைதிகளுக்குரிய கௌரவத்துடன் நடத்துங்கள் என்றோ புலிகளை ஒருவரும் கேட்க முடியாது. இப்படிக் கேட்கக் கூடிய யாராவது யாழ்ப்பாணத்தில் மிஞ்சி இருப்பார்களோ என்பதும் சந்தேகம்.


"இது யுத்த சமயம், கட்டற்ற ஜனநாயகத்தை எதிர் பார்க்க முடியாது. செய்து முடி அல்லது செத்துமடி என்பதுதான் மந்திரம்" என்று நியாயப்படுத்துகிற புத்தி ஜீவிக் குஞ்சுகளும் இல்லாமலில்லை. தமிழ் இயக்கங்களின் போராட்ட வரலாற்றில் - குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இரத்தம் செறிந்த வரலாற்றில். (இந்த இரத்தத்துள் அப்பாவித்தமிழ் மக்கள், அப்பாவி முஸ்லிம் மக்கள், அப்பாவிச் சிங்கள மக்கள், போராளிகள் புலிகள் அனைவரது இரத்தமும் அடங்கும்) தூக்கலாகத் தெரிகிற ஒரு அம்சம் எதிர்க் கருத்துள்ள எவரையும், எந்த நிறுவனத்தையும் அழித்தொழிப்பது. இந்த அழித்தொழிப்பு ஒரு கருத்தியலாகவே விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில் வளர்ந்துள்ளது.

தேவையேற்படுகிறபோது பொது எதிரியுடனிணைந்து கூட எதிர்க்கருத்துள்ள - தங்களுடைய நிறுவன நலனுக்குப் பாதகமானதாகத் தாங்கள் கருதும் எவரையும்/ எதனையும் எவ்விதமாகவும் அழிக்க அவர்கள் தயங்கியதில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தேசிய விடுதலை இயக்கங்களின் வரலாற்றிலிருந்தும், ஸான்டினிஸ்டாக்களின் போர் வரலாற்றிலிருந்தும், நாங்கள் ஏதாவது கற்றுக் கொள்ள இருக்கிறதென்றால் அது - அரசியல் இயக்கங்களுக்கிடையேயும் உள்ளேயுமான ஜனநாயகமும், அரசியல் கருத்து நிலையில் குறி பிசகாத ஒற்றுமையும் தான் நீதியோடு கூடிய வெற்றியைத் தரும் என்பதே.

உலகம் முழுவதிலும் போராட்ட இயக்கங்கள் எண்ணற்றோரைக் கொன்று குவித்துள்ளன. கொலை செய்யாமல் விடுதலை பெறமுடியாது என்பது போன்ற யந்திரத்தனமான அரசியல், வரலாற்றுக் குருடர்களுக்கே உகந்தது. கிழக்கு ஐரோப்பிய அனுபவங்களுக்குப் பிறகும் போராட்டமும் ஜனநாயகமும் பற்றிய காட்டுமிராண்டித் தனமான பார்வையே விடுதலைப் புலிகளிடம் இருக்கும் என்றால் தமிழ் மக்களுக்கு (முஸ்லிம் மக்களுக்கு அல்ல) ஒருவேளை தமிழ் ஈழம் கிடைக்கலாம், ஆனால் சுதந்திரம் கிடையாது.

மனித விழுமியங்களுடன் கூடிய சுதந்திரத்திற்கான போர் சமூக, அரசியல் தளங்களில் எப்போதும் இருந்து கொண்டேயிருக்கப் போகிறது. இது தமிழர்களுக்கும் பொருந்தும், சிங்களவர்களுக்கும் பொருந்தும் முஸ்லிம்களுக்கும் பொருந்தும்.



## சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!




REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி!



கூட்டுப் படைத் தலைமையகத்திற்கு முன்னால் வைக்கப்பட்ட குண்டு புலிகளால் தான் வைக்கப்பட்டது என அரசாங்கம் தீர்மானித்து விட்டது. நியூட்டன் என்ற புலியால் திட்டமிடப்பட்ட இது மட்டக்களப்பிலிருந்து வந்த தற்கொலைப் படையினரால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது அதன் ஆரம்ப அறிவிப்பு. பிந்திக்கிடைத்த தகவல்களின்படி ஒரு சிங்கள வியாபாரிக்கும் இச்சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாக 'லங்காதீப' எழுதியுள்ளது. ஜே. வி. பி-புலி தொடர்பு உள்ளதா என்ற சந்தேகமும் கிளப்பப்படுகிறது.

ரஞ்சன் கொலையின் போது எந்தத் தடயங்களும் கிடைக்கவில்லை என்றும் இந்தக் குண்டு வெடிப்பின் போது சில தடயங்கள் கிடைத்துள்ளன என்றும் அது அறிவித்துள்ளது. அந்தத் தடயங்கள் தான் நியூட்டனையும் மட்டக்களப்பையும் இனங்காட்டியிருக்கின்றன போலும்.

வழமை போல வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, புறக்கோட்டைப் பகுதிகளில் தேடுதல் வேட்டையும், 260க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

வழமை போலவே கொழும்பில் இருப்பதற்கு ஏஜென்சியையும் கனடா, சுவிஸ் போன்ற நாடுகளையும் தவிர காரணம் காட்ட வேறெதுவும் இல்லாதவர்களே இம்முறையும் 'அள்ளிக் கொண்டு போகப்' பட்டுள்ளார்கள்.

கம்புறுப்பிட்டியாவில் 13வது கம் உதாவக் கண்காட்சியில் நின்றபடி என்னைப் பயமுறுத்தி எதையும் சாதிக்க முடியாது! என்று கர்ஜிக்கிறார் ஜனாதிபதி. பயமுறுத்துவதன் மூலம் சாதிக்க முடியாது என்று அவர் சொல்வது எதனை?

'தமது அரசியல் குறிக்கோள்களை' என்று அவர் சொன்னதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்படியானால் வேறு வழிகளில் அவற்றை நிறைவேற்ற முடியும் என்று சொல்கிறார் என்று அர்த்தமா?

அந்த வழி என்ன? அவர் சொல்லும் 'அரசியல் குறிக்கோள்கள்' தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியதாக இருந்தால், அந்த வழி தான் என்ன?

ஏதாவது ஒரு 'விடுதலை இயக்கம்' அந்த வழி முறையைக் கையாளாததால் தானா ஜனாதிபதி எதையும் கொடுக்கிறதில்லை என்கிறார்.

அப்படியானால் 'எல்லாம் தந்தோம் ஈழம் எதற்கு?' என்று சொல்வதன் அர்த்தம் என்ன?

குண்டு வெடிப்பு முதல் என எல்லாச் சம்பவங்களையும் தமிழ்க் குழுக்களின் தலையில் கட்டிவிட அரசு துடிப்பது வேறெந்த வழிகளிலும் கூட இனப்பிரச்சினை தொடர்பான கோரிக்கைகள் எழாமல் தடுக்கவா? என்ற சந்தேகம் கொழும்புப் பத்திரிகைகளைப் படிக்கும் எவருக்கும் எழுந்தால் அதில் வியப்பொன்றுமில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் உள்ள அபிப்பிராயம் தான் என்ன? தீர்வாக எதை முன்வைக்க அரசு விரும்புகிறது என்று எல்லோரும் தம்பங்குக்குக் கேட்டாயிற்று.

பதிலும் வழமை போல 'நாம் தீர்க்கத் தான் போகிறோம்' என்று தான் இருக்கிறதே ஒழிய தீர்ப்பதற்கான எந்த உருப்படியான முயற்சியையும் காணவில்லை.

இது ஒரு வகை கண்ணாமூச்சி விளையாட்டு என்கிறார் சலிப்படைந்த தமிழர் ஒருவர்.

'என்ன அது கண்ணாமூச்சி விளையாட்டு' என்றேன் நான்.

'பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை இருப்பதாக அரசு காட்டிக் கொள்கிறது. பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சியினரும், புலிகளும் கூறுகின்றனர். ஆனால் எல்லோருக்கும் இருக்கும் ஒரே விருப்பம் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது தான் என்றே எனக்குப்படுகிறது.

இது எனக்கு 77 தேர்தல் காலத்தில் பேசப்பட்ட ஒரு கதையை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தது.

பிரதான அரச வைத்தியசாலை ஒன்றின் முன் பெரிய புண்ணுடன் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்திருந்தான்.

"காலேலாதவன் அம்மா காலேலாதவன் ஐயா தர்மம் தாங்கோ...." சில்லறைகள் சிலவற்றைத் தட்டில் போட்ட ஒருவர் கேட்டார்.

"ஏனப்பா, ஆஸ்பத்திரியில் மருந்து சும்மா தானே குடுக்கிறாங்கள் உதுக்கு மருந்து வாங்கிப் போடாதயன்"

பிச்சைக்காரன் மெல்லியதாக முனகியபடி சொன்னான் 'புண் மாறினால் நான் எதைக் காட்டி பிச்சை எடுப்பது'.

சம்பந்தப்பட்டவர்கள் அனைவர்க்கும் இக்கதை சமர்ப்பணம்.

தமிழ்நாடு தேர்தல் முடிவுகள், இந்திய தேர்தல் முடிவுகள் வெளியானபோது இரு தமிழர்கள் பேசிக் கொண்டவை இவை.

"காங்கிரசு வென்றது சரி, கருணாநிதி தோத்தது தான் சரியான அடி எங்களுக்கு"

"ஏன் அவர் இருக்கேக்க மட்டும் ஏதோ புடுங்கினவரே.... சும்மா வெளியில தங்கடை சொந்த லாபத்திற்காக கதைச்சாலும் உள்ளுக்கை அவங்கடை நோக்கம் இந்திய அரசு சொல்றபடி நல்ல பிள்ளையாய் நடக்கிறது தானே.....

"கருணாநிதி அப்படி இல்லை, இந்தியப்படை செய்த அநியாயத்தைப் பகிரங்கமாய் கண்டிச்சவர். இலங்கை அரசுக்கு எதிராக அதிகமாகப் பேசினவர். கருணாநிதியின்ரை அரசாங்கத்தை கலைச்ச போது இலங்கைக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? செத்த ரஞ்சன் கூட இந்தியா செய்த சிறப்பான நடவடிக்கை எண்டு சொல்லேல்லையா?"

எல்லாம் சரி தான், ஆனால் ஆட்சி வந்தவுடன் சுருண்டு படுத்திட்டார் அவர். அதை மறந்திட்டியோ?"

"எண்டாலும் உலகத் தமிழற்றை தலைவர் எண்ட முறையிலை கருணாநிதி இப்படிப் படுதோல்வி அடைந்தது கவலை தான். இலங்கையிலை ஏதாவது நடந்தால் இனித் தட்டிக் கேட்ட ஆர் இருக்கினம். தட்டிக் கேட்க ஆளில்லாட்டி தம்பி சண்டப் பிரசண்டன் எண்ட நிலை தான் வரப்போகுது....."

"ஆனால் இந்தியா இப்ப முந்தி மாதிரி இல்லை இவர்கள் நினைச்சபடி நடக்கலாமெண்டு அவங்கள் அப்பவே சொல்லிப் போட்டாங்கள். கருணாநிதி இருந்தாலென்ன, ஜெயலலிதா இருந்தாலென்ன எல்லாம் ஒண்டு தான்.... அகதி முகாமில் இருக்கிற சனம் எவ்வளவு கஷ்டப்படுகுது தெரியுமே....?

"எனக்கென்னவோ தமிழ்நாட்டிலை இப்படி ஒரு நிலை வந்தது எங்களுக்கு ஆபத்துத் தான் நாங்கள் ஆரை நம்ப? பெடியளை நம்பவா? அரசாங்கத்தை நம்பவா? இந்தியாவை நம்பவா? எவ்வளவு சரியில்லை எண்டாலும் கருணாநிதி தான் கொஞ்சமெண்டாலும் குரல் கொடுத்திருப்பார். இப்ப அவரும் இல்லை... இவங்கள் இனி தெருநாயை அடிச்ச மாதிரித் தான் அடிப்பாங்கள்...."

இந்திய அரசியல் பற்றியும் எமது மக்களது மனதின் விரக்தி நிலை பற்றியும் புரிந்து கொள்ள இது கொஞ்சம் உதவும் என்று நினைக்கிறேன்! இல்லையா?

ஜேர்மனி அரசாங்கம் 'மனிதாபிமான அடிப்படையில் புகலிடம் வழங்கும்' தனது சட்டத்தை நீக்குவதற்கான தீர்மானமென்றை ஜூன் நடுப்பகுதியில் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிகிறது. இதன்படி, இச்சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் அங்குள்ளவர்களில் இன்னமும் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தவிர்ந்த ஏனையோர் - திருப்பி தமது நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் "மனிதாபிமான" உறவுகள் கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் இணைந்த பின் அவசியமில்லை என்று ஜேர்மனிய அரசு கருதுகிறதோ என்னவோ இதனால் பெருமளவில் பாதிக்கப்படப் போபவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்பதில் ஐயமில்லை.

இலங்கைத் தமிழர்கள் இப்போது ஜேர்மனி, கனடா, சுவிற்சலாந்து, லண்டன், பிரான்சு, நோர்வே ஆகிய நாடுகளில் பெருமளவில் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் சொந்த நலன் கருதி யுத்தத்தின் நெருக்கடிக்குள் வாழ அஞ்சி வெளியேறியவர்கள் என்ற போதும், அரசாலும் இயக்கக் குழுக்களாலும் ஏற்படக்கூடிய ஆபத்தின் காரணமாக வெளியேறியோரும் கணிசமான பகுதியினர் இருக்கின்றனர். ஜேர்மனியின் இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதை உதாரணமாகக் கொண்டு பிறநாடுகளும் இதைச் செய்யுமானால் இலங்கைக்கு திரும்பி அனுப்பப்படும் லட்சக் கணக்கானோரில் கணிசமான பகுதியினர் என்ன செய்வதென்று சொல்ல முடியாத ஒரு சிக்கலுக்கு உள்ளாவார்கள்.

இலங்கையில் இதனால் ஏற்படக் கூடிய உயிரிழப்புகள் பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஆனால் அது மிகவும் அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

'இந்த நாடுகளில் இருப்பவர்கள் திரும்பி வருவது நல்லது. இங்கு நாம் கஷ்டப்பட அவர்கள் சுகபோகமாக வாழ்கிறார்கள்' என்ற ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறதும் உண்மை தான்.

ஆனால் வடக்கு - கிழக்கு இவ்வளவு அழிவின் பின்னும் ஓரளவாவது நிமிர்ந்து நிற்பதற்கு இவர்கள் வெளியில் இருப்பதும் ஒரு காரணம் என்பதையோ, வருபவர்களது உயிர்ப்பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் அவர்களை வரும்படி சொல்வதற்கு இங்குள்ளவர்களுக்கு உரிமை கிடையாது என்பதையோ இவர்கள் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

இந்த ஜேர்மானியச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படுமானால் அது மற்றைய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படுமானால் அவர்கள் போய் குடியேற தென் துருவத்திலோ, வட துருவத்திலே அல்லது அண்ட வெளியிலோ ஒரு இடத்தைத் தயார் செய்து கொடுக்க யாராவது முன்வருவார்களோ தெரியவில்லை.

இலங்கையிலோ, தமிழீழத்திலோ அவர்களுக்கு இடம் கிடைக்குமோ என்னவோ? யாராவது ஏதாவது செய்து கொடுக்காவிட்டால் அவர்கள் எதைத்தான் செய்வார்கள்? தமிழர்கள் எப்போதும் யாரையாவது எதிர்ப் பார்த்துப் பழகியவர்கள். இயக்கங்கள், இந்தியா, வெளிநாடு என்று... அவர்கள் எதிர்ப்பார்த்த எல்லாருமே ஏமாற்றி விட்ட பின் அவர்கள் எதைத்தான் செய்வார்கள்....

அல்லது ஒரு அகதிகள் கூட்டத்தையே கொலை செய்த புதிய பழியையும் ஜேர்மனி சுமக்க வேண்டி வரலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



சமயத்தில்
எதிரிகிடைக்காவிட்டால்
ஊரில் மனிதர்களும்
மின்சாரக் கம்பங்களும்
உண்டு
அதுவும் கிடையாத
போது
நெறி பிறழாத ஒரு
தோழனை.....

# நெறி பிறழாத.... குறி பிசகாத....

துரதிர்ஷ்டா

இது சுகுமாரின் கவிதை. சமீபத்தில் பழைய சஞ்சிகைகளைப் புரட்டியபோது பார்க்கக்கிடைத்தது. இந்தக்கவிதைக்கும் இனி எழுதப் போவதற்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? சரி சொல்கிறேன்.

கடந்த மே 17ம் திகதி தீப்பொறியைச் சேர்ந்த நோபேட் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து 21ம் திகதிக்கிடையில் ஸ்ரீநிவாசன், கோவிந்தராஜன் (இவர்கள் யாழ்பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள்) தோவிந்தன் என்பவர்களுடன் மீரர் என்கிற யுவதி உட்பட மொத்தம் பத்துப்பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இக் குறிப்பை எழுதிக் கொண்டிருக்கும் இதுவரை இவர்களைப்பற்றி எதுவித தகவலும் கிடை க்கவில்லை

நான் இப்படிச் சொன்னதும் உங்களுக்கு யாழ்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஜிதரனும் விமலேஸ்வரனும் கூடவே N.L.F.T. ரமணியும், P.L.F.T. அன்ரனும் தமிழ் மக்கள் பாதுகாப்புபேரவையைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்டவர்களும் இன்னமும் இவர்களைப்போல் காணாமல் போய் சடலங்களாய் மீட்கப் பட்டவர்களும் மீட் கப்படாதே போன எனக்குத் தெரியாமல் உங்களுக்குத் தெரிந்த பலரது முகங்களும் ஞாபகத்துக்கு வரலாம்.

அவர்களைப்பற்றியும் எதுவித தகவல்களும் இதுவரை இல்லைத்தானே?

இனிஇந்தக் நோபேட்டைப் பற்றி சில குறிப்புகள்; இவரை டொமினிக் கேசவன், கோவிந்தன் பிரான்ஸிஸ் சேவியர் என்கிற பெயர்களாலும் அழைப்பதுண்டு. திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர். தனது பல்கலைக் கழக வாழ்க்கைக் காலத்தில் சீன சார்புக கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடற்புற்றிருந்த இவர் பின்னர் 'ஜனவேகம்' எனும் அமைப்புடனும் தொடர்பு கொண்டிருந்தார். திருமலையில் 'சங்கப் பலகை' என்கிற பெயரில் ஒவ்வொரு போயா தினத்திலும் சமூக, அரசியல், கலை, இலக்கியம் பற்றிய கருத்தரங்குகளை ஐந்து வருடங்களாக தொடர்ந்து நடாத்தி வந்தார். 80களில் மலையகத்தி லிருந்து வெளிவந்த தீர்த்தக்கரை என்கிற சஞ்சிகையின் ஆசிரியர்குழுவில் ஒருவர். இக்காலத்தில் மலையக மக்கள் தொடர்பாக அக்கறையுடன் பணியாற்றிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு செயற்பட்டவர். 84இல் புளொட்டின் மத்திய குழுஉறுப்பினராயும் தள நிர்வாகச் செயலராகவும் இருந்தவர். பின்னர் அதன் தவறான அரசியல் மார்க்கம் உட்கட்சி ஜனநாயகமின்மை உட்கட்சிப் படுகொலைகள் என்பவற்றால் அதிருப்தியுற்று அதிலிருந்து வெளியேறினார்.

அத்தோடு அவற்றை அம்பலப்படுத்துமுகமாக தீப்பொறி என்கிற பத்திரிகையையும் (இது மூன்று இதழ்களோடு நின்று போனது துரதிர்ஷ்டமானது!) புதியதோர் உலகம் என்கிற நாவலையும் எழுதினார்.

இந்நாவல் பற்றியும் சில வரிகள் குறிப்பிடத்தான் வேண்டும்; போராளிக்குழுக்கள்ள எங்கடை பெடியள், என்றும் அவர்கள் புனிதர்களாகவும் மீட்பர்களாகவுமே படைக்கப் பட்டவர்கள் என்றும் இதனால் ஒரு போதுமே பெடியள், பிழை விடாங்கள் என்றும் நம்பிய காலம்.

அன்றைய காலத்தில் விடுதலைப் போராட்ட வழிமுறை தொடர்பாக ஜனநாயக மத்தியத்துவம், திறந்த கருத்துபகிர்வு, மாற்று அபிப்பிராயங்களுக்குச் செவி கொடுத்தல் என்பவற்றை மறுதலித்து போராளிக் குழுக்களினுள்ளே அதிகாரப் போட்டிக்காக நடந்தகுத்து வெட்டுக்களையும் குழிப்றிப்புகளையும் எதிரி இராணுவத்திற்கு சற்றேனும் குறையாத சித்திரவதைகளையும் கொலைகளையும் அம்பலப்படுத்திய முதலாவது சான்றும் நாவலும் இது!

இந்நாவலும் தீப்பொறி பத்திரிகையும் வெளியான போது இவற்றுடன் தொடர்புடைய இருவர் புளொட்டினால் கைது செய்யப்பட்டு தெருவில் வைத்து நிர்வாணமாக நையப் புடைக்கப்பட்டனர். இச்சம்பவமானது தம்மைப் பற்றியமாயை சிதைந்து விடப் போகிறதென்ற அச்சத்தினாலும் பயத்தினுலும் மேற்கொள்ளப்பட்டதுடன், இந் நாவல் எவ்வளவு தூரம் அவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதையும் புரிய உதவியது.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இச்சம்பவங்கள் தொடர்பாக மற்றக்குழுக்கள் எதுவும் எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்காமல் மௌனம்காத்தன என்பதாகும். இது ஏனைய குழுக்களுக்குள்ளேயும் இதே மாதிரியான நிலைமை வெவ்வேறு அளவிலே இருந்தன என்பதையும் அவற்றைக் களைந்தெறிவதில் அவை தயக்கம் காட்டின என்பதையும் புலப்படுத்திற்று.

எனவே இந்நாவல் புளொட்டைப் பற்றி எழுதப்பட்டது எனக் குறிப்பிடுவதை விட அன்று போராட்ட களத்தில் நின்ற எல்லா போராளிக் குழுக்களுக்குள்ளேயும் இருந்த நிலைமையை வெளிப்படுத்தியது எனலாம். இந்த வகையில் தமிழர் வரலாற்றின் ஒரு முக்கியமான காலகட்டத்தைப் பதிவு செய்தது இந்நாவல்!

சரி இனி விடயத்திற்கு வருவோம்.

கேசவனை யாழ் பிறவுண் றோட்டில் அவர் தங்கியிருந்த வீட்டில் வைத்து புலிகள் கைது செய்தபோது "நீங்கள் தீப்பொறியைச் சேர்ந்தனீங்கள் என்றபடியாலும், தீப்பொறி எப்போதும் எங்களுக்கு எதிராகத்தான் வேலை. செய்யும்" என்றபடியாலும் உங்களைக் கைது செய்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தக் கைதுகளின் பின் யாழ் பல்கலைக் கழகத்தில் நடந்த கூட்டமொன்றில் "கொழும்பில் இருந்து வந்த புளொட் உறுப்பினருக்கு தங்க இடவசதி அளித்ததாலும், ஆயுதங்களுக்குப் பொறுப்பாக இருந்ததாலும் ஸ்ரீநிவாசனையும், அவருக்கு உதவியதற்காக கோவிந்தராஜனையும் கைது செய்துள்ளதாக உண்மையைத் திரித்துக் கூறி உள்ளனர்.

இங்கே நாம் மிகவும் அவதானிக்கவேண்டிய விடயமொன்று உளது. அது என்னவென்றால் எந்த அரசியற் குழுவும் தங்களுக்கெதிரானது தான் எனப் புலிகள் முடிவு செய்து விடுவது என்பதுடன். இவ்வாறு கைது செய்பவர்களை தேசிய விடு தலைப் போராட்டத்தின் எதிரிகளாக, சமூக விரோதிகளாக மக்கள் மத்தியில் முத்திரை குத்தி விடுவது என்பதும் தான்.

இதில் முதலாவது விடயமான எல்லா அரசியற் குழுக்களும் தங்களுக்கெதிரானது தான் என்ற புலிகளின் முடிவு அவர்களது அரசியற் பலவீனத்திலிருந்து தோற்றம் பெறுகிறது எனக் கொள்ளலாமா? ஏனெனில் இவர்களால் இது வரை கைது செய்யப்பட்ட தீப்பொறி, N.L.F.T., P.L.F.T. பேரவை என்பன அரசியல் ரீதியாக கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் தமிழர் விடுதலைப் போருக்கு எதிராக செயற்பட்டவர்கள் என்று எந்தவொரு கட்டத்திலும் கூறிவிட முடியாது. குறிப்பாக இலங்கை, இந்திய அரசுகள் தொடர்பாக மிக அவதானமான கணிப்பைக் கொண்டிருந்தவை இவை. அவ்வாறானால் இவர்கள் எங்கே தவறிழைத்துள்ளார்கள் என்று ஏன் புலிகள் கூற முடியாதுள்ளார்கள் என்ற கேள்வி எழுப்புவது நியாய மானதல்லவா?

இந்தக் கேள்வியை அமுக்கி விடுவதற்காகத்தான் இவ்வாறு கைது செய்பவர்களை சமூக விரோதிகளாக, இன விரோதிகளாக முத்திரை குத்தி விடுவதை மிக இலகுவாகச் செய்து விடுகிறார்கள் புலிகள். ஏன்? எவ்வாறு? என்று கேள்வி எழுப்பிப் பழக்கப்படாத நாமும் ஒமென்று தலையாட்டி ஒத்தூதி விடுகிறோம்.

இந்நிலைமை எவ்வாறு உருவானது? என்பது மிக முக்கியமானதொரு வினா.

அந்த மின்சாரக் கம்பத்தைச் சுற்றிக் கொஞ்ச சனம். எட்டிப் பார்த்தேன். கம்பத்துடன் கட்டப்பட்டபடி ஒரு உடல். நெற்றியிலிருந்தும் மார்பிலிருந்தும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. தலை கீழே தொங்கிக் கொண்டிருந்தது. சாரத்திலும், சேட்டிலும் இரத்தத் தெறிப்புகள். நெற்றி வெடிப்புக்கண்டிருந்தது. முழுக்கை சேட்டுக்குள்ளால் வெளியே தெரிந்த ஒன்றோ இரண்டு விரல்களில் நகத்திற்குப் பதிலாக இரத்தம் காய்ந்திருந்தது. சாவின் பீதியும் அவலமும் முகத்தில். கழுத்தில் தொங்கவிடப்பட்ட அட்டையில் கோணல் மாணலாக திருடன் என எழுதப்பட்டிருந்தது. அதற்கு முன்னால் எழுதப்பட்டிருந்தது புரியவில்லை.

எனக்கு அருகில் நின்றவர் மற்றவரின் காதுக்குள் கிசுகிசுத்தார். "மூஞ்சையைப் பாக்கவே தெரியுது. இவன் செய்திருப்பான் எண்டு" மற்றவரும் தலையாட்டினார் இருக்குமென்று.

இது ஒரு சம்பவம். இனிப் பிரச்சினைக்கு வருவோம்.

எமது மக்களின் உரிமைப் போரின் பேரால் எப்போது



எதுவித தருக்க நியாயமுமற்று எங்கடை பெடியள் எப்பவும் சரியாகத் தான் செய்வாங்கள் என்று கண்மூடித்தனமாக எல்லா அதிகாரத்தையும் கையளித்தோமோ அப்போதே ஆரம்பித்து விட்டது எனக் கூறலாமல்லவா?

மறுபுறத்தில் தமது அபிலாஷைகளுக்கும் சமூகத்தின் மீள்வுக்காகவுமென மக்களால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை ஆயுதங்களின் துணை கொண்டு அதே மக்கள் மீது எப்போது பிரயோகிக்க ஆரம்பித்தார்களோ அப்போதே என்றும் சொல்லலாமல்லவா?

விமர்சனங்களையும், மாற்று அபிப்பிராயங்களையும், ஜனநாயகப் பண்பையும் தூக்கி எறிந்து விட்டு தமது வழி மட்டுமே முழுக்க சரியானது என்கிற தர்க்க நியாயமற்ற முடிவை எப்போது ஒவ்வொரு போராளிக் குழுவும் தமது கையில் எடுத்துக் கொண்டதோ அதுவே எமது சமூகத்தின் முதலாவது தற்கொலையாகும்.

ஒரு உதாரணம்; தனது அரசியல் எதிரிகள் கொல்லப்பட்ட போது மௌனம் சாதித்ததனூடாக அதனை அங்கீகரித்தது தமிழர் விடுதலைக் கூட்டணி. வரலாற்றின் நேரடித் தர்க்க விளைவு அதே இடத்தில் கொண்டுவந்து நிறுத்தியது அமிர்தலிங்கத்தை. சமூக விரோதிகள், உளவாளிகள் என ஆரம்பித்த இவ்வன்முறை மார்க்கத்தின் பரிணாமம் மாற்றுக் கருத்துள்ளோர், மாற்றுக் குழுக்கள் என விரிவடைந்து தங்களைத் தவிர மற்றைய எவர்க்கெதிராகவும் என்கிற ஒரு பாதாளத்தின் முன்னாள் நிறுத்தியுள்ளது.

இதற்கு தனியே புலிகளை மட்டும் காரணமாக்கி எவரும் தப்பித்து விட முடியாது. இந்திய -இலங்கை ஒப்பந்தத்துக்கு முன்னர் நடந்தவையும், பின்னுள்ள காலப் பகுதியும் கந்தசாமி (T.R.R.O) காணாமல் போனதும் ஒவ்வொரு போராளிக்குழுவுமே இந்நிலைமைக்குக் காரணம் என்பது நான் சொல்லாமலே உங்களுக்குப் புரியும் அல்லவா?

கூடவே அவ்வப்போது கொகோகோலாவும், கோழி இறைச்சியும், கொடுத்த நாங்கள் ஒவ்வொருவரும் தான் என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன்.

இவ்வாறான கைதுகளும் காணாமற் மோதல்களும் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதும் இவற்றை நாம் எப்படித் தடுத்து நிறுத்தப் போகிறோம் என்பதும் இன்று நம்முன்னுள்ள பிரச்சினை அல்லவா?

---

நான் நினைக்கிறேன், கசியிழையமாகிப் போன நமது முதுகெலும்புகள் எல்லாம் மீண்டும் முதுகெலும்பாகும் போது என்று.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

# கறுத்த ஜூலை

## சூர்வாசன்

ஜூலை மாதத்திற்கும் எங்களுக்கும் நிறையத் தொடர்புகள். இப்படிச் சொன்னவுடன் உங்களுக்கு 83 ஜூலை ஞாபகத்திற்கு வரும். கூடவே 87 ஜூலையும்!

இவற்றுடன் கூடவே இன்னுமொன்றையும் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். நாங்கள் எல்லோரும் மௌனித்திருந்து மறந்து போன விடயம் அது.

என்னவெனில் 88 ஜூலையில் நடந்த விமலேஸ்வரனின் படுகொலையாகும். விமலேஸ்வரனின் படுகொலை அப்படி என்ன தாக்கத்தை நம்மத்தியில் ஏற்படுத்தி விட்டது என்கிறீர்களா?

நிச்சயமாக அது ஒரு பாதகமான நிலையைத் தான் ஏற்ப்டுத்தியுள்ளது. எவ்வாறெனில் தமிழர் தம் போராட்டத்துடன் கூடவே வளர்ந்து வந்த ஜனநாயக மறுப்புப் போக்கும், எதேச்சாதிகாரமும் இரண்டு இடங்களில் கேள்விக்குள்ளானது.

ஒன்று; புளொட்டுக்குள்ளிருந்த ஜனநாயக மறுப்பையும், எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்து தீப்பொறி குழுவினர் வெளியேறியபோது.

இரண்டாவது; யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்ட போது நடாத்தப்பட்ட சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தின் போது.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே விமலேஸ்வரன் காத்திரமான பங்கை ஆற்றி உள்ளார். புளொட்டிலிருந்து தீப்பொறி குழுவினர் வெளியேறிய கால கட்டத்திலேயே விமலேஸ்வரனும் வெளியேறினார் அதே காரணங்களுக்காக.

தமிழர் தம் போராட்டத்தின் மிக முக்கியமான ஜனநாயக கூறாக, மேற்கிளம்பிய தீப்பொறி கனலாகாமல் சாம்பரானது ஒரு துயரம்!

இரண்டாவதாக விஜிதரன் புலிகளால் கடத்தப்பட்ட போது யாழ் பல்கலைக்கழக மாணவர் அனைத்துத் தமிழ் இயக்கங்களையும் நோக்கி இரண்டு முக்கியமான கோரிக்கைகளை முன் வைத்தனர்.

முதலாவது மக்களது பேசும், எழுதும், பத்திரிகை சுதந்திரத்திற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாது என்பது.

இரண்டாவது ஒருவர் தான் விரும்பிய கட்சியில் சேரவும், அதனை ஆதரிக்கவும், சார்ந்திருக்கவுமுள்ள உரிமை என்பது.

இக் கோரிக்கைகளுக்காகவும் கடத்தப்பட்ட விஜிதரனை விடுதலை செய்யக் கோரியும் சாகும் வரை உண்ணா விரதமிருந்த ஆறு மாணவர்களுள் விமலேஸ்வரனும் ஒருவர்.

எல்லா இயக்கங்களும் இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டன, புலிகளைத் தவிர! இக்கோரிக்கைகள் தம்மை அரசியல் அநாதைகளாக்குகின்றன என்பதன் பேரில். (மக்களுக்கு பேசும், எழுதும், பத்திரிகைச் சுதந்திரத்தை வழங்குவது புலிகளை அநாதைகளாக்குகிறதாம். அவ்வாறாயின் மக்களுக்கு இச்சுதந்திரங்களை மறுப்பது தான் புலிகளின் பலமாம், இதை வைத்துக் கொண்டு புலிகள் மக்களின் நலன்களுக்கு முரணாக இருக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணினால் அதற்கு நான் பொறுப்பல்ல.)

10 நாட்களாகத் தொடர்ந்த இப்போராட்டம் புலிகளுக்கும் உண்ணாவிரதிகளுக்கும் இடையே இருந்த சமரச சக்திகளாலும், இப்போராட்டத்தை தத்தமது நலன்களுக்கு பாவிக்க சில சக்திகள் முயன்றதாலும் கைவிடப்பட வேண்டியதாயிற்று.

மொத்தத்தில் இரண்டு ஜனநாயகக் கீற்றுக்களுமே அழிக்கப்பட்டுவிட்டன.

88 ஜூலை 18 இல் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விமலேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்டதற்கான காரணத்தை புலிகள் இது வரை வெளியிடவில்லை.

பின்னே என்ன கோழிக்கள்ளன், காட்டிக் கொடுத்தான் துரோகி என்று இலகுவாகக் கூறி விடமுடியுமா?

விமலேஸ்வரனிலிருந்து தீப்பொறிவரை இந்த ஜனநாயக மீறலுக்கும், எதேச்சாதிகாரத்திற்கும் பலியாயிற்று. "இந்த ஜனநாயக அத்து மீறல்களுக்கு நாம் குரல் கொடுக்கவில்லை என்றால் தொடர்ந்தும் இதே நிலையைத் தான் கடைப்பிடிக்க வேண்டிவரும்." அதாவது ஒன்றிலும் ஈடுபடாமல் இருக்க வேண்டி வரும்" என்ற விமலேஸ்வரனின் வார்த்தைகள் தான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றன.







### அர்த்தம்

(விமலேஸ்வரன் நினைவாக...)

அது அவனது மேசை.
புத்தகங்கள்,
பேனைகள்,
சிதறிக் கிடக்கின்ற
கடுதாசித் துண்டுகள்,
பாதி இழுக்கப்பட்ட
லாச்சியின் உள்ளிருந்து
எட்டிப் பார்க்கிற
ஒரு பழைய சஞ்சிகை...
எல்லாம் அவனுடையவை.

மேசையின் ஓரத்தே
நேற்றைய தினம் அவசரமாகப் புறப்படுகையில்
தட்டுப்பட்டு ஊற்றுண்ட
இன்னும் உலராத
மைக்கறை.

குறிப்புகள் எழுதப்படாத
அவனது டயரியின் பக்கங்களில்
எங்காவது
சிவப்பாலோ
நீலத்தாலோ
போடப்பட்டிருக்கும் புள்ளிகளைப் பார்த்தபடி
புரட்டுகையில்...

மூன்று வரிகள் மட்டுமே எழுதப்பட்ட
துண்டுக் காகிதம்.

மூன்றே மூன்று வரிகள்.

என்றைய பொழுதும்
தனது முடிவுக்கான பொழுதாகிவிடக்கூடிய
விறுவிறுப்பானதாய்
அமைந்து போனது குறித்து
புன்னகையுடன் பேச முடிந்த அவனை
நினைவு கூர்வதாய்
அந்தக் காகிதம்.

நிகழ்காலம் முழுவதையும்
அர்த்தமின்றிக் கழித்தபோதும்
எதிர்காலம்
தன்னைப் போற்றப்போவதாய்
கனவு காணவும்
அதற்காகவே
குறிப்புகள் வரைந்து வைக்கவும் செய்கிற
இவர்களின் மத்தியில்
ஓய்வேயில்லாத வாழ்வையே
குறிப்புகளாக்கி விட்டுப்போன
எனது நண்பனே.

நெஞ்சு வெடிக்கின்ற வேதனையுடன்
என்றென்றைக்கும்
நினைவுகூரப்படுவதாய்
காக்கைகள் கூடச் சாட்சிக்கு வரமறுக்கும்
எமது தேசத்தின்
தெருவோரத்தில்
குருதியை ஓடவிட்டு
ஒரு முட்டாள் தேசத்தின் அறியாமைக்காக
துயருற்ற வேதனைச் சிரிப்புடன்
நீ கிடந்தாய்...

இப்போது புரிகிறது
உனது வரிகள்,

சாவதிலும் அல்ல
சாகடிக்கப்படுவதிலும் அல்ல
வாழ்வதில்தான் இருக்கிறது அர்த்தம்.


-சிட்டு-

நன்றி - நூலகத்திட்டம்



# அருணவின்.. கவிதைகளும்.... அருணை பற்றிய... நினைவுகளும்...

## எம்.எச்.எம். ஷம்ஸ்



"ஐம்பத்தெட்டு கலவர வேளை
அந்தோ ஞானம் மனைவி குஞ்சுகள்
எம் வீட்டுக்குள் புகலிடம் கொண்டதால்
எதிர்த்துக் கிளம்பிய இன வெறிக் கும்பலை
அம்மா கையில் கத்தியை ஏந்தி
அதட்டித் துரத்திய அந்தக் காதை
தம்பியே நெஞ்சத் திரையில் இன்றும்
தணியா நினைவாய்த் தோற்றம் வழங்கும்

நாகமணியும் சின்னத் தம்பியும்
நறுமணத் தோசை வடையும் கொண்டு
பாகெனச் சிரித்தெம் வீடகம் வருவதும்
பழகும் உறவில் பாசம் கொள்வதும்
சாகா நினைவுகள்; சிங்களம் தமிழெனும்
சாதிய பேதம் அறிந்திலோம்; ஆனால்
பகைவன்-நண்பன் பேதம் பாரா
பித்தரோ உன்னைப் படுகொலை புரிந்தார்

ஜூலைப் புயலில் செங்கடலையில்
தமிழ்க் குடிகளைக் காத்த உன் செயலை
நீளக் கதையாய்க் கூறுவர் தம்பி
நீயோ மோட்டார் சைக்கிளில் அன்று
சாலை வழியே எனக்கேன் பகையென
தனியே சென்றாய் மீளாப் பயணம்
பாலை நெஞ்சத் தின வெறிப் பேய்க்கு
பகைவன்-நண்பன் வேற்றுமை உண்டோ?"

'அருண இசைத்த கவிதைகளும் அருணவுக்காக இசைக்கப்பட்ட கவிதைகளும்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள கவிதை நூலில் தனது தம்பியின் நினைவாக பியஸேன கஹத கமகே அவர்கள் எழுதியுள்ள கவிதையே இது. நீத்தார் பெருமை கூறும் படைப்புக்களுக்குள் இந்நூல் புதுமை வாய்ந்தது.

ஏனெனில் இங்கு அருணவின் குரல் கேட்கிறது; அதனைத் தொடர்ந்து அருணவின் நினைவோடொட்டிய சோகக் குரல்கள் கேட்கின்றன.

1987 இல் இருபத்தாறு புத்த பிக்குகளின் உயிரைப் பலி கொண்ட அரந்தலாவை காட்டுக் கிராமத்தில் அந்தப் பாபச் செயலின் இரத்த வாடை அடங்கு முன் அதே இடத்தில் புலிகளால் சுட்டுக் கொலை செய்யப் பட்டார் அருண கஹதகமகே. 'திவயின' பணிமனையில் பத்திரிகையாளராக வேலை செய்த அருண, கவிதையிலும் சிறு கதையிலும் ஆர்வம் காட்டினார். பின்னர் கிராமிய பயிர் செய்கைத் திட்ட முகாமையாளராக அரந்தலாவைக்கு அருகில் கடமையாற்றினார். ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகவும் இன வெறியை ஒழிப்பதற்காகவும் அயராது உழைத்தார். அவரது செயற்பாடுகள் போலவே படைப்புக்களும் மானிட நேயத்தை வெளிப்படுத்தின.

வன்னிப் பிரதேச ஏழை விவசாயிகளின் பெருமூச்சுக்கள், சமூக ஏற்றத் தாழ்வின் விளைவான காயங்கள், தோட்டத் தொழிலாளரின் வேதனைக் குரல்கள் - இவையே அவரது கவிதைகளின் அடிச்சரடாக ஓடுவன.

நூலின் முதற் பகுதியில் அருணவின் 57 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று;

" தேக் கொழுந்து புன்னகைத்து
காதுக்குள் சொன்னது;
இளம் பச்சை நிறம் உங்கள்
வியர்வையே தந்தது
மழை வெயில் பனிக் காற்றை
பொன்னகையால் ஏற்றுக் கொள்!
காணி நிலம் மாளிகைகள்
வாகனங்கள் எல்லாம்
ஒரே மனிதனின்
சொத்தாக்கி இறந்து போ!

தேயிலைப் பெண்ணே கேள்
உங்கள் இரத்தத்தால்-
வழிகின்ற வியர்வையால்
மலை நிலம்
செழித்ததால் அன்றோ
தேநீரும் சிவக்கிறது?"

அருண இயற்றி அச்சேறாதிருந்த கவிதைகளை அண்ணன் நூலாக்கியுள்ளார். அத்தோடு நில்லாமல் பன்னிரு சிங்களக் கவிஞர்கள், இரு தமிழ்க் கவிஞர்கள், இரு முஸ்லிம் கவிஞர்கள் வழங்கிய கவிதாஞ்சலிகளும் இடம் பெற்றுள்ளன. அருண ஓர் இளம் படைப்பாளி. அண்ணன் பியசேன கஹதகமதே நாடறிந்த எழுத்தாளர். வனவதுலே வசந்தய, கொஹதன்னே வட்ட விதானே, வனகத்த சாரிகா, விந்தன்னே வித்தி, குகுல் ஹொரா, அல்லபு ஹட்டி போன்ற பல படைப்புக்களைத் தந்தவர். அவர் ஏன் இந்தக் கவிதாஞ்சலியைத் தந்தார்?

......... வடக்கிலும் தெற்கிலும் இளைஞர்களின் வன்முறை எழுச்சி தலை தூக்கியமை எண்பதுகளின் பின்னரைப் பகுதியில் காணக் கூடிய ஒரு போக்காகும். தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள இரு திறத்தினரும் எதிர்க் கருத்துள்ளவர்களைக் கொலை செய்ததன் மூலம் பாசிஸத் தன்மையை வெளிப்படுத்தினார்கள்.

.......... இவ்வெழுச்சி எக்காரணத்தினால் விளைந்தாலும் யுத்தத்தில் இறப்பவர்கள் மனிதர்களே. இறந்தவர்களுக்குள்ளும் அகதிகளுக்குள்ளும் பெரும்பாலானவர் அப்பாவிகளே. சிங்கள- தமிழ்முஸ்லிம் என வேறுபாடின்றி யுத்தத்தின் பயங்கர விளைவு பொது மக்கள் மீதே அழுத்தம் பெற்றது. எனது தம்பி அருண கஹதகமகே அவ்வாறு இறந்த ஆயிரத்தவருள் ஒருவன்.

அருணவைப் பலி கொண்ட இனவாதத்தையும் யுத்த வெறியையும் புறக்கணிக்க வேண்டும். அதற்கான சிந்தனைக்கு வழிப்படுத்தும் சம்வாதமொன்றை ஏற்படுத்துவதே எம்மால் செய்யக் கூடிய காரியம். எல்லா மனிதர்களும் சுய கௌரவத்துடன் சுதந்திரமாக வாழக் கூடிய உலகொன்று இருத்தல் வேண்டும். இறந்து போனவரைப் பற்றி அழுது புலம்புவதில் எந்த அர்த்தமும் இல்லை. அவரது மரணம், யுத்த வெறியை எதிர்க்கும் சிந்தனையை நோக்கி வழிப்படுத்தவும் தேசிய ஐக்கியத்தை நோக்கிய சமவாதத்துக்கு பக்கபலமாகவும் முடியுமாயின் அதுவே அவருக்குச் செய்யும் உயரிய அஞ்சலியென்று நான் நினைக்கிறேன்."

-என்று பியசேன கஹதகமகே தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் 'புதிய அலைக் கவிஞர்கள்' பலர் அருணவுக்காக அஞ்சலிக் கவிதை வழங்கியுள்ளனர். 1989 இல் கவிதைக்காக சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றவரும் சிறந்த பாடலாசிரியருமான ரத்ன ஸ்ரீ விஜேசிங்க 1974, 1986 ஆம் ஆண்டுகளில் முறையே கவிதைக்கும் சிறுகதைக்குமாக சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற தயாசேன குணசிங்க, பன்னூலாசிரியர் டப்ளியூ. ஏ. அபேசிங்க, 'அயோமா' திரைப் படக் கதாசிரியர் தெனகம ஸிரிவர்தன, 'விவரண' ஆசிரியர் எஸ். ஜி. புஞ்சி ஹேவா, பிரபல்ய பெண் கவிஞர் மொனிகாருவன் பதிரன போன்றோரின் படைப்புக்கள் நூலை ஈரமாக்குகின்றன.

எஸ். ஜி. புஞ்சி ஹேவாவின் மனதைத் தொடும் கவிதையின் ஒரு பகுதி;

"பிறவாக் குழந்தைக் கருவொன்று
தாயின் வயிற்றில் கேட்கிறது;

அருண மாமா கொலையுண்ட உலகில்
நானும் பிறப்பதால் பயன்தான் என்ன?

நாங்கள் பிறந்திட
நல்லதோர் உலகை
படைத்திட முயன்றார்
அவர்
..................................................
கருவில் நானும் இருப்பதால்
இன்னும் இனமொன் றெனக்கில்லை

பிறந்து விட்டால் இனமாவேன்
பின்னர் பிறரால் கொலையுண்பேன்
அன்றேல் என்னால் கொலையுண்பர்
இந்தக் கொடுமை எதிர்த்தவரே
அருண மாமா; அவரில்லா
உலகம் எனக்கு சீ வேண்டாம்!

கொடுமை புரியும் மானிடரே
கருப்பைக் குள்ளே என்னையும்
கொன்றே விடுக!"


'கல்லோயா யாத்திரை' என்ற கவிதையினைத் தந்துள்ள குமார ஹெட்டி ஆரச்சி கூறுகிறார்;

பனையின் பாகு சுவைக்கும்
தென்னம் பாகும் சுவைக்கும்
தேனை விடவும் எமக்கு
தாயின் பாலே சுவைக்கும்

இருளை வென்று நாளில்
அருணன் தோன்றும் போது
இந்தக் கவிதைத் தானே
பாவாடை யாகட்டும்!"

அருணவின் கவிதாஞ்சலி சிங்களக் கவிதைத் தொகுப்பு எனினும் உ.சேரனின் 'யமன்' கவிதையும் 'பாவம் மக்கள்' என்ற (தமிழ்) தொகுப்பில் இடம் பெற்ற 'தெற்கின் தோழனுக்கு ஒரு கடிதம்' என்ற கவிதையும் எஸ். சிவகுருநாதனின் மொழி பெயர்ப்பாக இடம் பெற்றுள்ளன. இவற்றோடு எம். எச், எம். ஷம்ஸின் 'பார்வையற்ற பயணம்' நிர்ருல் நிலாரின் 'அதிர்ச்சி' என்பனவும் இடம் பெற் றுள்ளன.

அருண சிந்திய செந்நீரினால் அண்ணனின் இதயம் கண்ணீர் வடித்தது. அந்தக் கண்ணீர் வீணே வற்றிவிடவில்லை. அதிலிருந்தும் பூத்தது ஒரு கவிமலர்!



நன்றி - நூலகத்திட்டம்



# சிவரமணியின் கவிதைகள்...

மாயா

சிவரமணியை 1985 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல பெண்கள் கல்லூரியின் தமிழ்த்தின விழாவின் கவிதை வாசிப்பின் போது முதன் முதலிற் கண்டேன். அப்போது உயர்தர வகுப்பு மாணவியாக இருந்த சிவரமணி தமது கவிதை மூலம் சொல்லிய செய்தியும், அவரது கவிதையாக்கமுறையும் வயதுக்கு மிஞ்சிய முதிர்ச்சி அவரிடம் நிறைந்திருந்ததைக் காட்டின.

பின்னாளில் அவர் யாழ்பல் கலைக்கழகத்தில் கற்ற போதும், வேறுபல பொது வேலைத் திட்டங்களில் ஒன்றாகப் பங்கு பற்றியபோதும் சிவரமணிக்கும் எனக்குமிடையே ஒரு நெருங்கிய ஸ்நேகிதம் வளர்ந்தது.

இந்த ஆறு வருடங்களில் சிவரமணியிடம் ஒரு அபூர்வ ஆளுமை வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்டேன். தன்னைச் சுற்றி நிகழ்கின்ற சம்பவங்கள்பால் கூர்மையான அவதானிப்பு, அறிவினில் ஆர்வம், எல்லையில்லாத உயிர்ப்பு அவரிடம் காணப்பட்டன.

இத்தகைய அவதானிப்பும், உணர்திறனும் உயிர்ப்புமே அவரை ஒரு கவிஞராகவும் ஆக்கியிருந்தன.

சிவரமணியின் கவிதைகளில் கூர்மையான சிந்தனையும், துணிச்சலான சொற்பிரயோகங்களும் அசாதாரணமான படிமங்களும் பளீரிடும். அசாதாரணமான ஒரு கவிஞராக வளர்வதற்குரிய ஆரம்ப இயல்புகள் அவரிடமிருந்தன. எனக்குத் தெரிய சுமார் 30 கவிதைகளை அவர் எழுதியிருந்தார். இன்று மிக மிகச் சிலவே எம்மிடம் எஞ்சியுள்ளன. இவை அவரது கவித்துவ ஆளுமையை எமக்கு வெளிப்படுத்து வன.

பெண்கள் ஆய்வு வட்டம், பல்கலைக்கழகக் கலை வட்டம் போன்ற அமைப்புகளில் அவர் இணைந்து செயற்பட்டார். உடுவிலில் இயங்கிய பூரணி பெண்கள் நிலைய த்தின் முக்கிய ஆதரவாளர்களிலும் ஒருவர் இவர். அங்கு கிராமத்து இளம் பெண்களிடையே கல்வியையும் விழிப்புணர்வையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இத்தனை இளம் வயதில் அவர் அறிந்தவையும் உணர்ந்தவையும் அநேகம்.

பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற நாடுகளுக்கு கருத்தரங்குகளிற் கலந்து கொள்வதற்காகச் சென்றிருக்கிறார் சிவரமணி, அங்கெல்லாம் தமது தயக்கமற்ற, நேர்மையான உரையாடல்களால் பயனுள்ள பல சிந்தனைகளை ஏற்படுத்தினார். இக் கருத்தரங்குகளில் அவருடன் கூடக் கலந்து கொண்டோர் இதனைக் கூறியுள்ளனர்.

எனினும் தற்துணிவும் சுதந்திர விகசிப்பும் கொண்ட பெண்களை எமது சமூகம் எவ்வளவு தூரம் பொறுத்துக் கொள்ளும் என்பது இங்கு முக்கியமான வினா. சமுதாயத்தின் கருத்து நிலைக் கொள்ளளவு இதற்கு போதுமானதாய் இல்லை. சுதந்திர எண்ணமும் ஊக்கமும் கொண்டவர் தமது மூச்சுத் திணறுவது போல உணரும் ஒரு பாலைவனச் சூழலே உள்ளது. விமர்சன நோக்கும் விட்டுக்கொடாத சுதந்திர விருப்பும் உடையவர்கள் சமூகத்தினால் ஒவ்வொரு கணமும் அமுக்கப்படுகிறார்கள். ஒரு பெண்ணுக்கு இது ஒரு நிரந்தரமான போராட்டம். தனது கருத்துக்களினதும், ஆர்வங்களினதும் வாழ்வா? சாவா? என்ற போராட்டம். சிவரமணி போராடினார். தமது கருத்துக்களையும் தமது ஆர்வங்களையும் உயிர்ப்புடன் வைத்துக் கொள்ள முனைந்தார். ஆனால் விட்டுக் கொடு! சமரசம் செய்! என்று வினாடிக்கு வினாடி எச்சரித்துக் கொண்டிருக்கும் சமூகத்துடன் தான் முற்றிலும் உயிர்ப்புடன் வாழ முடியாது என்று நினைத்தார் போலும்!

சிவரமணி தற்கொலை செய்ய முன்னர் தனது கவிதைகளை எரித்ததாக அறிகிறோம். தன்னைப் பற்றிய அடையாளம் எதையும் விட்டுச் செல்ல விரும்பாத ஒரு கசப்பு அவரிடம் வளர்ந்திருந்ததா? அல்லது தனது கவிதைகளை வைத்திருக்க இவ்வுலகிற்குத் தகுதியில்லை என்று நினைத்தாரா?

உலகின் முக்கியமான சில கவிஞர்கள் தற்கொலை செய்துள்ளனர். அதிலும் பெண்கவிஞர்கள் சிலர் தற்கொலை செய்துள்ளனர். அவர்களது தற்கொலை ஒரு சம்பவம் மாத்திரம் அல்ல. அவர்களது வாழ்க்கையையும் அவ்வாழ்க்கை நிகழ்ந்த சமூகத்தையும் பற்றி அது கூறுகிறது. சிவரமணியின் தற்கொலையும் இவ்வரிசையில் ஒன்று.

சிவரமணியின் ஆளுமையும் அவரது தற்கொலையும் எழுப்புகிற வினாக்களும் உணர்த்துகிற செய்திகளும் எமது கவனத்துக்குரியவை.

"நான் மனிதனாய் வாழும் முயற்சியில் பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்"

என்று அவர் 1989 இல் எழுதிய கவிதையின் வாசகங்கள் இப்போது எனது நினைவுக்கு வருகின்றன.



மாலை நேரங்களில்
எல்லாச் சுமைகளும் அதிகரித்துப்போய்விடும்.

செத்துப்போன பகல்களின் மீது
தவிர்க்க முடியாத படி
உரசிக் கொண்டிருந்த ஒளியும் வெப்பமும்
சிலேட்டில் கிறுக்கப்பட்ட எழுத்துக்களைப்போன்று
அடையாளமற்று அழிந்து மறையும்போது
எனது மூச்சை
எண்ணி எண்ணி வெளியே விடுவது
நேரத்தைப் போக்க மட்டுமல்ல.

விளக்கின் அருகில்
ஈசல்கள் ஒவ்வொன்ருக விழுந்து இறந்துகொண்டிருந்தன.
எதை எண்ணுவது புத்திசாலித்தனம்-
ஈசல்களையா?
இறந்துபோனவர்களின் கண்களைப்போன்று
விளக்கமற்ற அர்த்தங்களை
விடுத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களையா?

எனக்கு உண்மைகள் தெரியவில்லை,
பொய்களை கண்டு பிடிப்பதும்
இந்த இருட்டில் இலகுவான காரியமில்லை.
ஆனால்,
பரீட்சைக்குப் புத்தகம் படிக்கும்
என் தங்கையிடம்
உனதுபழக்கத்திற்கான
அர்த்தங்களைத் தேடு என்று கூறமுடியாது.

என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை.

இரவு,
இரவினால் அதிகாரமிடப்பட்ட பகல்,
நாளைக் காலையில் சூரியன் உதிக்குமா என்பதில்கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்.
தம் அர்த்தத்தை இழந்தவைதான்.

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கிநீட்டப்படும்போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக்கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்கு சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே.

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்.
எனக்கு
பகலால் உருவமைக்கப்பட்டு அழகிய இரவு
கனவாய் உள்ளது.

## யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்

யுத்தகால இரவுகளின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.

ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர்நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித் துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக்குழந்தைக் கதைகளினதும் அர்த்தத்தை
இல்லா தொழித்தது.

எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்துபோனார்கள்.
அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக் கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்
கேள்விகேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்,
மந்தைகள்போல எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்.

தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
"வளர்ந்தவர்" ஆயினர்.

●●

புத்திசாலித்தனமான
கடைசிமனிதனும்
இறங்குகொண்டிருக்கிறான்...

கேள்வி கேட்பதற்கான
எல்லாவாசலும் அறையப்பட்ட பின்னர்
இருட்டின்உறுதியாக்கலில்
உங்கள் குழந்தைகளை விட்டுச் செல்லுங்கள்
அவர்களுக்குப் பின்னால் எதுவுமே இல்லை
சேலை கட்டிக் காப்பாற்றிய
சில நாகரீகங்களைத் தவிர...
வினாக்களுக்குரிய விடைகள் யாவும்
அச்சடிக்கப்பட்டுள்ளன.
முடிவுகளின் அடிப்படையில்
வெற்றி பெற்றவர் வரிசையில்
யாரை இங்கே நிறுத்துதல் வேண்டும்?

தேசத்தின் புத்திசாலிகள் யாவரும்
சந்திக்குச் சந்தி
தெருக்களில் காத்துள்ளனர்.

வினாக்களும், விடைகளும், முடிவுகளும்
யாவருக்கும் முக்கியமற்றுப் போனது.
"மனிதர் பற்றிய மனிதத்தின் அடிப்படையில்
வாழ்வதை மறந்தோம்" என்பது
இன்றைய எமது
கடைசிப்பிரகடனமாயுள்ளது.

●●

மொத்தத்தில்
எல்லோரும் அவசரமாயுள்ளனர்.
என்னிடம்,
ஞாபகங்கள் மட்டும் எஞ்சியுள்ளன.

வெளியே,
பதற்றமற்று மௌனமாய் நிற்கும்
மரங்களின் நிழல்கள்
கீழே கிழிந்து போயுள்ளன.

தெருவில்
அவலமும் பதற்றமுமாய்
நாய்கள் குலைக்கும் போது
பூட்டப்பட்ட கதவுகளை
மீண்டும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு
எல்லோரும் தூங்கப் போகும் நேரத்தில்
நான்,
நாளைக்குத் தோன்றுகிற சூரியன் பற்றி
எண்ணமுடியாது.

இரவு எனக்கு முக்கியமானது.
நேற்றுப்போல்,
மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து போகக் கூடிய
இந்த இருட்டு.
எனக்குமிகவும் பெறுமதியானது.

சிவரமணி

நன்றி - நூலகத்திட்டம்



# தேசியவிடுதலைப் போராட்டம்

## ஒரு மீளாய்வை நோக்கி

- அன்னபூரணா -

சென்ற இதழில் ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் பற்றியும், அவ்வியக்கம் நடாத்திய போராட்டங்கள் பற்றியும், அப்போராட்டங்களின் முக்கியத்துவம் பற்றியும், அவ்வியக்கத்தின் சிதைவு பற்றியும் பார்த்தோம். 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுடன் அவ்வமைப்பு சிதைவுற்றது என்றும், அவ்வமைப்பில் இருந்தவர்களில் பலர் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாகவும் ஒரு சிலர் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு சார்பாகவும் பிரசார வேலைகளில் ஈடுபட்டார்கள் என்றும் பார்த்தோம். இவ்வாறு இவ்வமைப்பு சிதைவுற்றாலும் அடுத்த இளைஞர் அமைப்பான தமிழ் மாணவர் பேரவை தோற்றம் பெறுவதற்கு இவ்வமைப்பே வழிகோலியது என்றும் பார்த்தோம். இவ்விதழில் இரண்டாவது அமைப்பான தமிழ் மாணவர் பேரவையின் வளர்ச்சி தோற்றம் என்பன பற்றிப் பார்ப்போம்.

1970 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் முதன்முதலாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி - இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணி பாராளுமன்றத்தில் 2/3 பங்கு பலத்தைப் பெற்று ஆட்சியமைத்தது. ஆட்சிக்கு வந்த கூட்டணி அரசாங்கம் பல்கலைக்கழகத் தெரிவைப் பொறுத்தவரை மொழி மூலமான தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்தது. இத் தரப்படுத்தல் முறையின்படி சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படும் போது குறைந்த புள்ளிகளையும், தமிழ் மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கூடுதலான புள்ளிகளையும் எடுக்க வேண்டியவர்களாக இருந்தனர்.

பல்கலைக்கழகத்தின் ஒவ்வோர் பீடத்தையும் பொறுத்தவரை அனுமதிக்காக தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும் எடுக்க வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் பின்வருமாறு காணப்பட்டது. (பார்க்க அட்டவணை)

இத்தரப்படுத்தல் முறை தமிழ் மாணவர்களையும், குறிப்பாக யாழ் மாணவர்களையும், யாழ்ப்பாண சமூக அமைப்பையும் ஒரு உலுக்கு உலுக்கியது. இதற்கு யாழ்ப்பாண சமூக அமைப்பு கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவம் ஒரு காரணமாக அமைந்தது. யாழ்ப்பாண சமூக அமைப்புக்குரிய நிலப்பிரபுத்துவ குணாம்சம் கல்வியால் கிடைக்கும் உத்தியோக சலுகைகளைக் கொண்டு அதன் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளல் ஆகும். இக்குணாம்சம் இத்தரப்படுத்தல் முறையால் சிதையும் நிலை தோன்றியது. இக்குணாசம்சத்தினர் யாழ்ப்பாண மத்திய தர சராசரி பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு செலவிடும் பணத்தினை ஒரு முதலீடாகவே கருதுகின்றனர். கல்விக்காக செலவிடப்படும் பணத்திற்கு மேலான பணத்தினை ஆண்பிள்ளைகளின் திருமணத்தின் போது சீதனமாகப் பெற்றுக் கொள்கின்றனர். பெண்களைப் பொறுத்தவரையில் திருமண நிச்சயதார்த்தத்தில் பெண்களின் கல்வியும் ஓர் அம்சமாக உள்ளதால் அவர்களும் அவசியம் கற்க வேண்டியவர்களாகவே உள்ளனர். அதேவேளை பெண்களிடமிருக்கும் கல்வித் தகைமை அவர்களுக்கான சீதனத் தொகையைக் குறைத்துவிடும் தன்மையையும் கொண்டிருந்தது. இதனை விட யாழ் குடாநாட்டின் வரண்ட நிலப்பகுதியின் தன்மையும், யாழ் மக்களை கல்வியை நோக்கி இழுத்துச் சென்றது.

ஐக்கிய முன்னணி அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை மேற்கூறிய தன்மைகள் கொண்ட யாழ்ப்பாணச் சமூகத்தை நிலைகுலைய வைத்தது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறைகளில் குடியேற்றம் யாழ் குடாநாட்டு மக்களைப் பெரிதாக பாதிக்கவில்லை. அரச உத்தியோகத்தில் பாரபட்சம், மொழிப்பாரபட்சம் என்பன குடாநாட்டு மக்களைப் பாதித்த போதும் தரப்படுத்தல் முறையே யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் பெற்ற சந்ததியினர் எதிர் நோக்கிய ஒடுக்கு முறையின் உச்ச நிலையாக இருந்தது.

இந்நிலைமைகளினால் யாழ்ப்பாண மாணவர்களும் இளைஞர்களும் இத்தரப்படுத்தல் முறையை எதிர்க்க வேண்டும் என்றும் தமிழர்கள் தம்மைத் தாமே ஆள்கின்ற ஒரு அரசை உருவாக்குவதன் மூலமே தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் எனவும் கருதினர். இதன் அடிப்படையில் மாணவர் பேரவை எனும் அமைப்பை உருவாக்கினர். இவ்வமைப்பை உருவாக்குவதில் ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தில் பங்காற்றியிருந்த த. முத்துக்குமாரசுவாமி, உரும்பராய் சிவகுமாரன் ஆகியோர் முக்கிய பங்கேற்றிருந்தார்கள்.

1970 ஆம் ஆண்டு கார்த்திகை மாதமளவில் தமிழ் மாணவர் பேரவையை உருவாக்குவதற்காக திகதி நிர்ணயிக்கப்பட்டு குடாநாட்டில் உள்ள எல்லா கல்லூரிகளின் உயர்தர மாணவர் மன்றத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் இரு கல்லூரிகள் மாத்திரம் அழைப்பை ஏற்றுக் கூட்டத்திற்கு வந்தன. இதனால் அமைப்புக் குழுக்கூட்டம் பிறிதோர் திகதிக்குப் பின்போடப்பட்டு ஒவ்வோர் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினரையும் நேரடியாகச் சந்தித்து உரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பேரில் ஒவ்வோர் கல்லூரியின் மாணவர் மன்றத்தினரையும் நேரடியாகச் சந்தித்து தமிழ் மாணவர்களுக்கான அமைப்பின் அவசியத்தையும், தரப்படுத்தலை எதிர்த்து போராட வேண்டியதன் அவசியத்தையும் அமைப்பின் முன்னோடிகள் வலியுறுத்தினார்கள். குறிப்பிட்ட திகதியில் மாணவர் அமைப்பை உருவாக்குவதற்கு வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்திகதியில் இரண்டாவது தடவையாக மாணவர் அமைப்பை உருவாக்குவதற்கான கூட்டம் நடாத்தப்பட்டது. இக் கூட்டத்தில் வடபகுதியில் இருந்த பெரும்பாலான மாணவர் மன்றங்கள் கலந்து கொண்டன. இக் கூட்டத்தில் தமிழ் மாணவர் பேரவை எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் மத்திய குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இம்மத்திய குழுவில் த. முத்துக்குமாரசுவாமி, உரும்பராய் சிவகுமாரன், ஏழாலை அரியரத்தினம், சத்தியசீலன், நித்தியானந்தன் ஆகியோர் அங்கம் வகித்தனர். இக்கூட்டத்தில் வைத்து கார்த்திகை மாதம் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தரப்படுத்தல் முறையை எதிர்த்து ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்துவது என்றும் அன்றைய தினம் சகல பாடசாலை மாணவர்களும் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து ஊர்வலத்தில் கலந்து கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 1970 கார்த்திகை 24 இல் கொக்குவில் சந்தியில் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். தமிழர் அரசியல் வரலாற்றிலேயே மிகக் கூடுதலானவர்கள் கலந்து கொண்ட ஊர்வலமாக இவ்வூர்வலம் காணப்பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் ஆரம்பத்தில் ஊர்வலத்தில் காணப்படவில்லையாயினும் ஊர்வலம் ஆரம்பித்து சிறிது தூரம் சென்றவுடன் அப்போது சாவகச்சேரி தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி. என். நவரத்தினம் ஊர்வலத்தில் கலந்து கொண்டார். ஊர்வலத்தில் அப்போதைய கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகம்மதின் கொடும் பாவியும் கொண்டு வரப்பட்டது. மாணவர்களின் கல்வியை பறிக்காதே! இனவிகிதாசாரக் கொள்கையை ஒழிப்போம். திறமைக்கு முதலிடம் கொடுப்போம்! சோஷலிஸமா? சிங்கள இசமா? போன்ற கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பப்ப ட்டன.

ஊர்வலத்தின் முடிவில் யாழ் முற்றவெளி மைதானத்தில் வைத்து கொடும்பாவி எரிக்கப்பட்டதுடன் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் மாணவ பிரதிநிதிகள் பலரும் பேசினர். தரப்படுத்தல் முறையைத் தொடர்ச்சியாக எதிர்க்க வேண்டும் என்றும், இவ்வெதிர்ப்புப் போராட்டத்தை தமிழ்ப் பிரதேசமெங்கும் நடாத்த வேண்டும் என்றும், தமிழ் மாணவர் பேரவையை ஒரு விடுதலை அமைப்பாக வளர்த்து விஸ்தரிக்க வேண்டும் என்றும் மாணவர்கள் பிரதிநிதிகள் உரையாற்றுகையில் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து அடுத்த எதிர்ப்பு நடவடிக்கையை கிழக்கு மாகாணத்தின் தலைநகரான மட்டக்களப்பில் நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டு அதற்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி 1970 மார்கழி 8 இல் மட்டக்களப்பில் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர் இவ்வூர்வலத்தில் பங்கு பற்றினர். யாழ்ப்பாண மாணவர். சார்பில் மாணவர் பேரவையின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இனவெறி ஆட்சியாளரைச் சித்திரிக்கும். கொடும்பாவி ஒன்றும் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டது. ஊர்வலத்தில் பல்கலைக்கழகமா? பலகாரக் கடையா? இனவிகிதாசாரக் கொள்கையை எதிர்ப்போம். திறமைக்கு முதலிடம் கொடுப்போம்! சோஷலிஸமா? சிங்கள இசமா? போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஊர்வலத்தின் முடிவில் பொதுக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டு கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. பொதுக்கூட்டத்தில் மாணவர் பிரதிநிதிகள் பலரும் தரப்படுத்தல் முறையின் கொடுமைத் தன்மை பற்றியும் அதற்கெதிரான போராட்டத்தின் அவசியம் பற்றியும் பேசினர். ஒற்றையாட்சி முறையில் தமிழ் மாணவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது எனவும், தமிழர்கள் தங்களுக்கென்று ஒரு நாட்டினை அமைக்கும் போதே அப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றும் கூறினர். தமிழ் மாணவர் பேரவையை தமிழர்களுக்குரிய தனி நாட்டை வென்றெடுக்கும் தேசிய விடுதலை இயக்கமாக வளர்க்க வேண்டும் எனவும் கூறினர்.

இவ்வாறு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் தமிழ்ப்பிரதேசம் எங்கும் நடாத்துவதற்கென முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்த போது தமிழ் மாணவர் பேரவையின் உறுப்பினர்கள் மீது பொலிஸ் கெடுபிடி அதிகரிக்கத் தொடங்கியது. இக்கெடுபிடியினால் இவ்வெளிப்படையான போராட்டங்கள் சரிவராது ஆயுதப் போராட்டம் மூலமே இவர்களுக்குத் தக்கபாடம் படிப்பிக்கலாம் என்கிற உணர்வு மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் உருவாகத் தொடங்கியது. நீண்டகாலமாகத் தமிழரசுக் கட்சியுனர் இப்போராட்டத்தைப் பின்பற்றி எதுவித நன்மையையும் பெற்றுக் கொள்ளவில்லை என்கிற அதிருப்தியும் இவர்களிடம் மேலோங்கியிருந்தது. அதே வேளை அன்றைய காலகட்டத்தில் பங்களாதேஷ் இளைஞர்களும், மாணவர்களும் பாகிஸ்தான் இராணுவத்திற்கு எதிராக "முக்திபாஹினி" இயக்கத்தில் சேர்ந்து ஆயுதப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருந்தமை இவர்களை மேலும் ஆயுதப் போராட்டத்தின் மீது கவர வைத்தது.

இதன் நிமித்தம் ஆயுதங்களைச் சேகரிப்பதிலும், வெடிகுண்டுகளைத் தயாரிப்பதிலும், மேலெழுந்தவாரியான தாக்குதல்களில் ஈடுபடவும் ஆரம்பித்தனர். இச்சேகரிப்பிலும் தாக்குதலிலும் சிவகுமாரன், முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ஞானமூர்த்தியின் மகன் சோதிலிங்கம், தற்போதைய புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோர் முன்னணியில் நின்றனர். இவர்களுடைய முதலாவது தாக்குதல் உரும்பிராயில் வைத்து பிரதியமைச்சரின் காருக்கு உரும்பிராய் சிவகுமாரனால் கைக்குண்டு வீசப்பட்டதோடு ஆரம்பித்தது. தொடர்ந்து கோண்டாவிலில் ரயில் பெட்டி எரிப்பு, இ. போ. ச. பஸ்கள் எரிப்பு அரச காரியாலயங்களில் தொங்க விடப்படும் தேசியக் கொடிகள் எரிப்பு என வளர்ச்சியடைந்தது.

1972 மே 22ம் திகதி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது குடியரசு அமைப்பு அமுலுக்கு வந்த போது இவர்களது நடவடிக்கைகள் உச்சநிலையிலிருந்தது. குடியரசு தினத்தையொட்டி மூன்று நாட்கள் வடக்கு-கிழக்கு எங்கும் பகிஷ்கரிப்பும் ஹர்த்தாலும் தமிழரசுக்கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட போது அது வெற்றியளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த அதே வேளை தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

தொடர்ந்து 1972ம் ஆண்டின் இறுதிக்காலப் பகுதியில் தமிழ் மாணவர் பேரவை மீதான பொலிஸ் கெடுபிடி உச்சநிலையை அடைந்தது. இதனால் முத்துகுமாரசுவாமி, சிவகுமாரன், சத்தியசீலன் உட்பட மத்திய குழு உறுப்பினர் பலர் கைது செய்யப்பட்டதோடு அவர்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் பலவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. கல்வியங்காடு கொண்டலடி வயிரவ கோவிலின் மூலஸ்தானத்தில் வைத்துப் பெருமளவு வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டது. இவ்வெடிமருந்தின் தரம் பொலிஸாரையே அதிசயிக்க வைக்குமளவிற்கு தரமானதாகக் காணப்பட்டது. பொலிஸாரின் இந்நடவடிக்கையால் ஏறத்தாழ தமிழ் மாணவர் பேரவையோடு தொடர்பு கொண்டிருந்ததாக 42 தமிழ் இளைஞர்கள் வரை கைது செய்யப்பட்டனர். ஏனையோர் தலைமறைவாகி விட்டனர். தலைமைக் குழுவில் இருந்தவர்களின் கைதும், பொலிஸாரின் தொடர்ச்சியான கெடுபிடிகளும் தமிழ் மாணவர் பேரவையை தொடர்ந்து இயங்க விடாமல் சிதைத்தது. இதில் கைது செய்யப்படாமல் எஞ்சியிருந்தவர்களில் பலர் ஆயுத இயக்கங்களை கட்டுவதில் ஈடுபட்டனர். இந்நிகழ்வுகளினால் 72இன் இறுதியோடு மாணவர் பேரவையின் செயற்பாடுகள் நின்றுவிட்டது என்றே கூறலாம்.

தமிழ் மாணவர் பேரவையின் இச்சிதைவுக்கு போராட்டம் பற்றிய தூரநோக்கின்மையும், வெளிப்படையான போராட்டமும், ஆயுதப் போராட்டமும் ஒன்றோடொன்று இணைந்தவை என்பதை விளங்கிக் கொள்ளாமையும் ஆயுத அமைப்பைக் கட்டுவதில் உள்ள தந்திரங்களைக் கையாளாமையும், மத்தியதர இளைஞர்களின் அவசரப் போக்குமே காரணமாக அமைந்திருந்தன.

தமிழ் மாணவர் பேரவையில் செயற்பட்ட இளைஞர்களிடையேயும், மாணவர்களிடையேயும் தேச விடுதலைப் போராட்டம் பற்றிய தூரநோக்கு இருக்கவில்லை. தேச விடுதலைப் போராட்டம் என்பது ஒரு நீண்டகாலப் போராட்டம். அந்நீண்டகாலப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு நீண்டகாலத்துக்குரிய கொள்கை, வேலைத்திட்டங்கள் என்பன அவசியமானதாகும். சரியான அரசியல் வழியைக் கண்டு பிடிக்க போதுமானளவு முன்னணியினரை திரட்டுவதற்கு பிரச்சாரம் செய்யப்பட்டு, அவர்களைத் திரட்டி, அவர்களுடைய செயற்பாட்டின் அடிப்படையில் பரந்துபட்ட வெகுஜனங்களைத் திரட்டும் பகிரங்க வேலைத்திட்டம் அவசியம் இருக்கவில்லை. மாறாக [illegible] காலத்தில் போராட்டம் [illegible] செயற்பாட்டினையே கொண்டிருந்தார்கள்.

→ பக்கம் 12 இல்

தொடர்ந்தும் [illegible] என்பதை மீண்டும் [illegible].

நன்றி - நூலகத்திட்டம்



இன்றைய இலங்கை அரசியலில் இரண்டு முக்கியமான கேள்விகளுக்குத் தெளிவான பதில்கள் அவசியம். ஒன்று. செல்வத்தையிலிருந்து ஒரு உதிரிப், பாட்டாளி வர்க்கப் (லும்பன்) பின்னணியில் உருவாகி, சிங்கள, தமிழ்,முஸ்லிம் என மூவினத்து மக்களும்/மாக்களும் செறிந்து வாழ்ந்த, வளர்ந்த சமூகச் சூழலில் வளம் பெற்று. இன்று ஜனாதிபதியாகப் பரிணாமம் அடைந்திருக்கும், ரணசிங்க பிரேமதாச அவர்களுக்கு ஏதாவது சமூக, அரசியல், கலாசார முக்கியத்துவம் உள்ளதா?

இரண்டு: ஜனாதிபதி பிரேமதாசவினால் தலைமைதாங்கப் படும் அரசு (State) இதுவரை காலம் இருந்து வந்துள்ள - குறிப்பாக 1948 இற்குப் பிற்பாடு-அரசுகளில் இருந்து அடிப்படையில் குணாம்ச ரீதியான வேறுபாடு உடையதா?


ஆம் அல்லது இல்லை என்ற ஒரு சொல் மறுமொழிகளில் இன்றைய அரசியல் யதார்த்தம் அறிவு பூர்வமாக முற்றாகப் பிடிபடாது. எனவே கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம். மேலோங்கிகளும், பிரித்தானியாவில் பட்டம் பெற்றவர்களும் அப்புக்காத்துகளும் தலைமை தாங்கி வந்த ஒரு அரசை பிற்படுத்தப்பட்ட ஒரு சமூக 'அடுக்கிலிருந்து மேற்கிளம்பிய ஒருவர் பொறுப்பெடுக்க, நேர்ந்தமை, முக்கியமானதுதான் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆளும் ஐ. தே. கட்சியினுள் இவ்வகையில் இரண்டு 'சிறு புரட்சிகள்' ஏற்பட்டுள்ளன என்று சொல்லலாம். முதலாவது டீ. எஸ். செனநாயக்கா, டட்லி செனநாயக்கா வழியான குடும்ப ஆடசி முறைப்பாரம்பரியம் ஒழிக்கப் பட்டமை (ஜே. ஆர். ஜயவர்த்தனா தன்து அரசியல் கடைப்புளி வாழ்வில் ஈட்டிய ஒரே ஒரு நன்மை! அதுதான்!)

இரண்டாவது. நிலவுடமை அமைப்பு, உறவு நிறுவன முறைகளிலிருந்து மேற்குலகு நோக்கிய பூரண முதலாளித்துவ அமைப்பாக ஐ. தே. க மாறியமை. (இந்த இரண்டு விஷயங்களும் சாத்தியப்படாமை தான் அம்மையாரின் சி. சுதந்திரக் கட்சியை மீள முடியாத எதிர்க்கட்சியாக என்றென்றைக்கும் வைத்திருக்கப் போகிறது என்பது வேறொரு விடயம்!) இத்தகைய இரண்டு அம்சங்களும், 14 வருடக் கட்டற்ற பொருளா தாரக் கொள்கையும் IMF, உலக வங்கி மற்றும் ஜப்பானின் 'கணக்கற்ற ஆதரவும் இன்றைய பிரேமதாச அரசிற்கு குறிப்பான இயல்புகள் சிலவற்றை வழங்கியுள்ளன. இந்தக் குறிப்பான இயல்புகளின் பொருளாதார முக்கியத்துவம் என்னவென்றால் இன்றைய இலங்கை அரசு முற்று முழுதாக IMF. உலக வங்கி என்பவற்றால் ஆளப்படும் சர்வதேசச் சந்தைப் பொருளாதாரத்துடன் பல்லும் சில்லுமாக இணைந்து விட்டது என்பதே. எவ்வித நிபந்தனையோ, கேள்விகளோ எழுப்பாமல் IMF. உலகவங்கி காலால் சொல்வதை இந்த அரசு தலையால் செய்கிறது. இந்த வகையில் பிரேமதாச அரசு ஜே. ஆர் அரசின் தர்க்கரீதியான தொடர்ச்சியே. வித்தியாசம் எங்கு வருகிறதென்றால் பிரேமதாச அரசுடன் இன்று அரசியல் ரீதியாகத் தங்கியிருக்கும் அரசியல் அமைப்புக்கள், குழுக்கள் மற்றும் பிரேமதாச தோற்றப்பாடு(PremadasaPhenomenon) என்ற ஒன்றை கற்பனை செய்து அதனை ஒரு சர்வதேச நிவாரணியாகப் பிரசாரம் செய்யும் முன்னாள் இடது சாரிகள் புத்தி ஜீவிகள் 'புரட்சியாளர்கள்' போன்ற பலதரப்பட்ட அரசியல் சக்திகளின் ஆதரவு (இவ்வாதரவு தமிழ், சிங்கள, முஸ்லிம் எனும் மூவினத்துவக் குழுக்களிடமிருந்தும் வருகிறது) முன்னைய அரசுகளுக்குக் கிட்டவில்லை என்பதிலேயே.


இன்னும் விளக்குவோம்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு தமிழ்ப் போராளிக் குழுக்களின் சிறிதளவு ஒத்துழைப்பேனும் கிடைக்கவில்லை. 87 இன் பிற்பாடான மாற்றங்களின் விளைவாக இன்று பல ஆயுதம் தரித்த மிழ்க் குழுக்கள் பிரேமதாச அரசுடன் நெருங்கியுள்ளன. இந்த நெருக்கம் அரசியல், இராணுவத் தளங்களில் ஆழமாக இருப்பதாகவே அறியக்கிடக்கிறது. இத்தகைய ஒரு நெருக்கத்தை பிரேமதாச அரசு புலிகளுடனும் ஒரு கட்டத்தில் வைத்திருந்தது. எனினும் எல்லோர்க்கும் தெரிந்த காரணங்களால் அது நீடிக்கவில்லை.

பிரேமதாசவின் அரசை முன்னைய அரசிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இன்னொரு அம்சம் என்னவென்றால் சாதாரண மக்களை இலகுவில் நம்பவைக்கக் கூடிய வகையில் பிரமைகளையும், தோற்றப்பாட்டையும், கவர்ச்சியாகவும் ஈர்ப்பு மிக்கதாகவும் எழுப்பும் தந்திரம். (அரசியல் விஞ்ஞானத்தில் இதனை பொப்யூலிசம் என்று சொல்கிறார்கள்) இந்தப் பொப்யூலிசம் ஒரு பூதக் கண்ணாடி மாதிரி, வலுக்கூடிய பூதக் கண்ணாடி. சிறிய விஷயத்தைப் பெரிதாகக் காட்டும். ஆனால் பூதக் கண்ணாடியில் தான் பார்க்கிறோம் என்று 'பாவம் மக்களுக்குத்'





நன்றி - நூலகத்திட்டம்



# ...தாச வாதம் ...பௌத்த ...வாதத்தின் ...ள வடிவம்

சிவா கௌதமன்

தெரியாது! இன்று தமிழ்க் குழுக்கள் பிரேமதாச அரசுடன் நிற்பது ஒரு வகையில் இனத்துவப் பிரச்சினையில் பிரேமதாசவின் அணுகுமுறைக்கு இத்தகைய ஒரு பொப்யூலிஸ்ட் கவர்ச்சியை ஊட்டியிருக்கிறது.

ஒரளவுக்கு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் அரசு சார்புத் தமிழ்க் குழுக்களுக்கு உரிய இடம் வழங்குகின்றன. யுத்தம் புலிகளுக்கு மட்டும் எதிரானது தான் என்ற கருத்தும் அது தொடர்பாக எல்லாத் தமிழர்களையும் புலியாகக் காணக் கூடாது என்ற அம்சம் மெல்ல ஊடாட்டமாக வருகிறது. புலனாய்விலும் கைதுகளிலும் (கொழும்பிலும் ஏனைய இடங்களில் முடிந்த அளவும்) தமிழ்ப் பிரிவுகளும் இப்போது ஈடுபட்டுள்ளதால் இலங்கையின் சிங்கள பௌத்த இராணுவ அரசமைப்பில் தமிழ் அடையாளம் ஏற்பட்டுள்ளது போதாததற்கு ஜனாதிபதியும் தான் கொண்டாடுகிற மேதினம் உட்பட அனைத்து விழாக்களிலும் தமிழையும் இயன்ற வரை பாவிக்க முனைகிறார். பௌத்த கோவிலுக்கு மட்டு மல்லாமல் கத்தோலிக்க ஆலயங்களுக்கும், இந்துக் கோவில்களுக்கும் போகிறார். (கூடவே ரூபவாஹினியும் பல்லை இளித்துக் கொண்டு போகிறது!)

தமிழ் மொழி அமுலாக்கம் மற்றும் சிறுபான்மை இனத்துவ விவகாரங்களில் அடிப்படையான அணுகுமுறையே மாறியிருக்கிறது என்ற பிரமை ஊட்டப்படுகிறது. இந்தப் 'பிரமையூட்டலை' பிரேமதாச அரசிற்கு முன்னைய அரசுகளால் செய்ய முடியவில்லை. இது முக்கியம்.

இந்தப் பிரமையூட்டலை ஒரு அடிப்படை மாற்றம் என்று மயங்கி சிங்கள பௌத்தப் பேரினவாதத்தில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ள தென்றும், சராசரி சிங்கள பௌத்தப் பேரினவாத மனோநிலை (mind-set) மாற்ற முற்றுள்ளது என்றும் நம்புகிற ஒரு புதிய சிந்தனையோட்டமும் அதையொட்டிய அரசியல் சார்பு நிலையும் ஒரு சில தமிழர்களிடையேயும் சிங்கள முஸ்லிம்களிடையேயும் உள்ளது. தயான் ஜயதிலக்கா, சுசில் சிறிவர்த்தனா போன்ற மாஜி இடதுசாரிகள் இச் சிந்தனையோட்டத்திற்கு வடிவமைத்து ஒருவகை 'நவ பிரேமதாச வாதம்' ஒன்றையே உருவாக்கியிருக்கிறார்கள்! இந்த வாதம் தான் பிரேமதாசவை கொர்பச்சேவுடன் ஒப்பிட்டு பெரெஸ்ட் ரோய்க்காவுடன் 'பிரேமோஸ்ட்ரோய்க்காவையும் கண்டு' பிடித்துள்ளது.

இந்த வாதம் தமிழ்ப்புத்தி ஜீவிகள் பலரையும் மயங்க வைத்துள்ளது. ஆனால் பிரேமதாச அவர்களுடன் பல்வேறு சக்திகள் கூட்டுச் சேரவும் தஞ்சம் புகவும் காரணம் என்ன? 'பிரதானமாக, JVP இடதுசாரி வெறுப்பானது ஒரு கட்டத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருந்த இடதுசாரிகளையும் புதிய இடதுசாரிகளையும் அரசிடமும், ஆளுங்கட்சியிடமும் பாது காப்புத் தேட வைத்தது. சுதந்திர மாணவர் சங்கம் போன்ற முன்னாள் முற்போக்கு அமைப்புகளும் JVP பயங்கரத்திற்கு எதிராக ஆளுங்கட்சியுடன் தந்தி ரோபாய ரீதியான(?) கூட்டிற்கு வந்தார்கள். இந்தக் கூட்டின் அரசியல் சித்தாந்த வளர்ச்சி/வீழ்ச்சியே இன்றைய அரசிற்கு அவர்கள் சித்தாந்த ரீதியாகவும், ராணுவரீதியாகவும் 'முற்போக்கு' 'ஜனநாயக' முலாம் பூசுவதாகும். "JVP ஃபாசிசத்தை விட பிரேமதாசவின் முதலாளித்துவ சர்வாதிகாரம் நல்லது" என்றும் அவர்கள் எழுதுகிறார்கள். மற்றொரு புறமோ புலிகளின் அரசியல் ஞானசூனியம், மற்றைய எல்லாக்குழுக்களையும் கிளின்ட் ஈஸ்ட்வுட் பாணியில் அடித்து விரட்டி விட்டு KILL THEM ALL AND COME BACK ALONE என்ற சித்தாந்தத்தை இறுகப் பிடித்திருப்பதால் மற்றைய குழுக்கள் கொழும்பை உடும்புப் பிடியாகப் பிடிக்க நேர்ந்துள்ள அவலத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழலில் மற்றைய இனக்குழுமங்கள் குறித்து அடிப்படையில் ஏதாவது மாற்றம் அரசில் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

குடியேற்றம் சம்பந்தமாக என்றாலென்ன, அதிகாரப்பரவலாக்கம் சம்பந்தமாக என்றாலென்ன, உருப்படியாக எந்த முன்மாதிரியையும் இந்த அரசு காட்டவில்லை.


அடிப்படையில் மாற்றமில்லை எனச் சொல்வதற்கு முக்கியமான காரணங்களிலொன்று தொடரும் குடியேற்றங்களாகும். மணலாறு (இன்று வெலிஓயா) பகுதியில் தீவிரமாகப் பாரம்பரியக் குடியேற்றங்களை அப்பாவிச் சிங்களக் குடியானவர்களின் உயிரிலும் ரத்தத்திலும் விலைபேசி அரசு தொடர்ந்து வருகிறது. புலிகளும் இத்தகைய குடியேற்றங்களை அழிப்பதற்கான ஒரே வழி என அப்பாவிச் சிங்கள மக்களைக் கொல்வதையே வைத்திருக்கின்றார்கள்.

பிரேமதாசா அவர்களின் பல்லின, பல்பண்பாட்டுத் திட்டம் கவர்ச்சியாக இருந்தாலும் ஆழ்ந்து நோக்குகிற போது அங்கு ஒரு வரிசைப்படுத்தல் (Hierarchy) தென்படுகிறது.

சிங்கள பௌத்தர்களுக்கு முதலிடம் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கு அடுத்த அடுத்த இடங்கள். சமத்துவம் என்ற பேச்சிற்கே இடமில்லை. கூடவே அர்ஸன் அஹுபுது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சிங்கள எழுத்தாளர்கள் சிங்கள இனம் அழிந்து போகும் ஆபத்து பற்றிக் குரலெழுப்புகிறார்கள், குணதாச அமரசேகர, நளின் டீ சில்வா போன்றவர்கள் ஜாதிகச் சிந்தனை என்ற பெயரில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தீவிரமாக வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இவர்களில் ஒருவராவது பிரேமதாசா அரசை எதிர்ப்பவர்கள் என்று சொல்ல முடியாது மாறாக, பிரேமதாசா அரசுக்கு எப்படி சிங்கள பௌத்த வண்ணத்தை மேலும் ஆழமாகப் பூசலாம்- என்றே செயல்படுகிறார்கள். சமஷ்டி முறைக்கு எதிராகத் திடீரெனக் குரல்கள் கிளம்புவதையும் நாம் அவதானிக்க வேண்டும். சிறுபான்மை இனத்துவக் குழுக்கள் நம்பிக்கை கொள்ளக் கூடியவாறு எவ்வகையான சமத்துவ நடவடிக்கைகளையும் பிரேமதாசா அரசு செயல்படுத்தவில்லை. மேலும், இருக்கக் கூடிய அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிராகவே பிரேமதாசா அவர்களுடைய அரசு தொழிற் படுவதாக மாகாண அரசுகளில் அதிகாரிகளாகப் பணிபுரிபவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கிராமோதய சபைகள், பிரதேச சபைகளைப் பலப்படுத்தும் பிரேமதாசா அவர்களின் "தனிப்பட்ட திட்டம்" அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரானது. ஏனென்றால் இப்போதுள்ள மாகாண சபைகளின் உயிப்பான தொழிற்பாட்டுக்கு அது எதிராகவே இருக்கும்.

சிங்கள பௌத்தர்களை குறியீடாகக் காட்டும் சிங்கக் கொடி தேசியக் கொடியாக இருக்கும் வரை உண்மையான சமத்துவம் ஏனைய இனத்துவக் குழுக்களுக்குக் கிடைக்காது. கிடைக்கவே கிடைக்காது; முரணான அபிப்பிராயங்கள் வாசகர்கள் யாருக்காவது இருப்பின் தயவு செய்து எழுதுங்கள் விவாதத்திற்கு நான் எப்போதுமே தயார்.



கொழும்பில் 'ஜனநாயம்' உறங்கும் நேரத்தில்
(இரவு ஒன்பது மணிக்கும் பன்னிரண்டு
மணிக்கும் இடையில் என்கிறார்கள்)
என்ன செய்யலாம்?

கடைப் பக்கம்,
நடு இரவில் பிளேன்– ரீ குடிக்கப்
போக இயலாது.
வீதி முனையில் பயங்கரம்
காத்திருக்கும், போகாதே
என்றான் நண்பன்.

"எங்காவது போய்த் தொலை
இலங்கையை விட்டு;
அதற்குப் பிறகுதான்
கடிதமும் காசும் அனுப்புவேன்"
என்கிறாள்
கனடாவிலிருந்து காதலி(லி).

என்ன செய்யலாம்?
கவிதை எழுதலாம்.
சரி;
இப்போது நன்றாகத் தெரிகிறது.
மண்ணில் நன்றாகக் கால் பதித்துக் கொண்டு
ஏன் உயரப் பறக்க முடியாதென்பது.........
சட்டம் ஒரு கழுதை என்றாலும்
ஏன் எல்லோரும்
அதில் ஏறிச் சவாரி விட
முடியாதென்பது.

உலகம் உருண்டையானாலும்
தொடர்ந்து நடந்தாலும்
ஏன் யாழ்ப்பாணத்துக்குப் போக முடியாதென்பது...
மேலும்,
"பல விஷயங்கள்"
ஏன் முடியாதென்பது...
வேறென்ன எழுத?

யாழ்ப்பாணத்தில்
'பு'னாவுக்கு தெரியாதது பல,
தெரிந்தது சில;
(அவையும் என்ன ஏதென்று
எனக்குத் தெரியாது; உனக்கும் தெரியாது
ஒருவருக்கும் தெரியாது!)
இன்னும்
'பு'னா பிடித்தது
கோட்டை; அதற்குப்
பிடிக்காதவற்றுள் முக்கியமானது
பேனா.

கொழும்புப்
'பி'னாவுக்குத் தெரிந்தது,
தொலைக் காட்சிக் கமெரா
தன்னைப் பார்க்கும் போது
சிரிக்க;
பார்க்காத போது
முறைக்க!

தெரியாதது;
எப்படி 60,000 பேர்
இரண்டு வருடத்துள்
காணாமல் போனார்கள் என்பது...

எனக்குத் தெரிந்தது என்ன?
எவருக்கும்
இந்தியர்களுட் பட –
எங்களுடைய 'சு'னாவை
(வேறொன்றும் எண்ணாதீர்
சுதந்திரத்தைச் சுருக்கினேன்
அவ்வளவு தான்!)
இரவல் கொடுக்கக்கூடாதென்பது...
இன்னும்
முக்கியமாக,
'சு'னா விட்டுக் கொடுப்பதற்கல்ல
(மற்றவர்களையும்)
விட்டு வைப்பதற்குத் தான்...

சரியா?

பின்[illegible]ட ஆண்டியார்

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போரும் துப்பாக்கி கலாசாரமும்

பாஞ்சாலி

விடுதலைப் புலிகளின் மக
ளிர் முன்னணியின் யாழ்
மாவட்டப் பொறுப்பாளரான
மாலினியுடன் நடாத்தப்பட்ட
பேட்டியில், "இன்றைய மகளி
ருக்கு நீங்கள் சொல்ல
விரும்புவது என்ன?" எனக்
கேட்கப்பட்டபோது அதற்கு
அவர் பின்வருமாறு விடை
யளித்திருக்கிறார். "இன்றை
க்குப் பொதுவாகவே
உலகெங்கும் ஆணாதிக்க
சமூகத்தால் பெண்
கள் ஒடுக்கப்படுகிறார்கள்.
பெண்கள் தங்கள் விடு
தலைக்கு ஒரு சரியான வழி
யைத் தேர்ந்தெடுக்க வேண்
டும்... இன்று தமிழ் பேசுகின்ற
மக்களின் அனைத்து உரிமை
களையும் வென்று எடுக்கக்
கூடிய பலம் வாய்ந்த உறுதி
யான அரசியல் கட்சியாக
விடுதலைப் புலிகள் மக்கள்
முன்னணி இருக்கின்றதை
உலகமே அறியும். இந்த நிலை
யில் இக்கட்சியின் ஒரு அங்க
மாகிய விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணியால் இங்கு
ள்ள பெண்களின் சுதந்திர
த்தை நிலைநாட்ட முடியும்
என்பதைப் புரிந்து கொண்டு
அனைத்துப் பெண்களும் எம
க்குப் பின்னால் அணிதிரள
வேண்டும்" (நங்கை, இதழ்
மே-ஜுன் 1990, பக்-4)

பெண்விடுதலை எனும் கோஷ
த்தினையும் பெண்கள் அமைப்
பினையும் எவ்வாறு வெறு
மனே யுத்தத்திற்கான ஆட்
சேர்ப்புத் தளமாக மட்டுமே
பாவிக்கப்படுகின்றன என்பத
ற்கு இது ஒரு நல்ல எடுத்
துக்காட்டு. தற்போது புலிக
ளின் பெண்கள் அமைப்பு புலி
கள் இயக்கத்தின் கைப்பொம்
மைகளாகவே இயங்கி வரு
கின்றூர்கள். இம் மகளிர் அமை
ப்பின் உறுப்பினர்கள் கூட
காலத்திற்குக் காலம் வெளி
யிடும் அறிக்கைகளிலும்
பேட்டி களிலும் ஆண்களுக்குச்
சரி நிகர் சமானமாக எப்படித்
தாங்களும் களத்தில் போரி
ட்டு மடிகிறார்கள் என்ப
தையே மீண்டும் மீண்டும்
வலியுறுத்துகிறூர்களேயொழிய
பரந்துபட்ட பெண்கள் மீதான
அடக்குமுறைக்கு எதிராகக்
குரல் எழுப்பவோ நட
வடிக்கைகள் எடுப்பதாகவோ
இல்லை. சர்வாதிகார ஆட்சி
நடாத்தும் புலிகள் இயக்கத்
தின் கீழ் இயங்கும் இம்மகளிர்
அமைப்பு முற்போக்கான
காரியங்களைச் சாதிக்கும் என
நாம் எதிர்பார்க்க இயலாது.
எனினும் இவ்வமைப்பில்
உள்ள ஒரு சில பெண்
களாவது தவறுகளை உணர்
ந்து அவற்றுக்கு எதிராகக்
குரல் கொடுக்காமை கவலைக்
குரிய விடயம். முழுச் சமூ
கமும் எவ்வகையான விமர்
சனத்தையும் முன்வைக்க முடி
யாத நிலையில் வாய்மூடி
மௌனிகளாக 'துப்பாக்கியின்
நிழலில்' வாழும் இக்கால
கட்டத்தில், ஆயுதம் ஏந்திய
பெண்களும் பெண்களுக்கு
எதிராக இழைக்கப்படும்
கொடுமைகளுக்கு எதிராக
குரல் கொடுக்கா விட்டால்,
இப்போது அதனைச் செய்ய
க்கூடிய நிலையில் வேறு
யாரும் இல்லை.

நாம் ஒரு முக்கிய விடயத்தை
மன திற்கொள்ளவேண்டும்.
எத்தனை ஆயிரம் பெண்கள்
இயக்கத்தில் சேர்ந்து போரா
டுகிறார்கள் என்பதோ அல்
லது எத்தனை பெண்கள் கள
த்தில் உயிர் நீத்தார்கள் என்
பதோ அல்லது பெண்கள் எவ்
வாறு ஆண்களுக்குச் சரிநிகர்
சமானமாகப் போர்புரிகிறு
ர்கள் என்பதோ பெண்கள்
எவ்வளவு தூரம் முன்னே
க்கிச் சென்றுள்ளார்கள் என்
பதனைத் தீர்மானிக்கப்போவ
தில்லை, மாறாக, இயக்கத்
திற்குள் முடிவெடுக்கும்
மட்டங்களில்/ அதிகார ஸதா
னங்களில் எவ்வளவு பெண்கள்
இருக்கிறார்கள் என்பதே இய
க்கத்திற்குள் பெண்களின் பல
த்தைத் தீர்மானிக்கப் போகி
றது. அத்துடன் அதிகாரத்தில்
இருக்கும் பெண்களும் 'பெண்
கள் விடயத்தில்' எவ்வளவு
தூரம் விழிப்புணர்வு கொண்
டுள்ளார்கள் என்பதும் முக்கிய
மானதாகும். இல்லாவிட்டால்
அவர்களும் ஆணாதிக்க கரு
த்தியலை உள்வாங்கிய நிலை
யில் பெண்களுக்கு துரோகம்
இழைப் பவர்களாகவே இருப்
பார்கள். இயக்கத்திற்குள் இரு
க்கும் பெண்கள் அதிகாரப்
பகிர்வு தொடர்பாக கேள்வி
கள் எதனையும் கேட்பதாக
இல்லை. மத்திய குழுவில்
எத்தனை பெண்கள் அங்கம்
வகிக்கின்றார்கள் என்றோ
அல்லது முக்கிய பதவிகளில்
பெரும்பாலும் ஆண்களே
இருக்கின்றார்கள் என்றோ
இவர்கள் இன்னும் சிந்திக்கத்
தொடங்க வில்லை.

பனாமா ஆக்கிரமிப்பு, ஈரா
க்கிற்கு எதிரான யுத்தம்
போன்றவற்றில் அமெரிக்க
பெண்கள் எவ்வாறு யுத்த
முனையில் போரிட்டார்கள்
என்பது பற்றி அதிகம் பேசப்
பட்டது. பெண்கள் ஆண்
களைப் பின்பற்றி நடப்பதன்
மூலம் விடுதலையடைந்துவிட
முடியும் என்ற கருத்தே
பெண் புலி உறுப்பினர்களின்
பேச்சில் இருந்து
அறியக்கூடியதாக உள்ளது.
இவ்விடயத்தில் நாம்
அவதானமாக இருக்க வேண்
டும். ஆண் ஆதிக்கத்தினையும்
அடக்கு முறையினையும் ஒழி
த்துக்கட்டுவதே பெண்கள்
அமைப்புக்களின் பணியாக
இருக்க வேண்டுமேயொழிய
இவ் ஆண் ஆதிக்க அதிகார
அமைப்பில் பங்கு கொள்
வதற்கல்ல. அதிகார துஷ்பிர
யோகங்கள், கொலைகள்
போன்றவற்றை பெண்கள்
அமைப்புகள் கேள்விக்கு உட்
படுத்த வேண்டும்.

புலிகளின் பெண்கள் அமைப்பு
பெண்விடுதலையை முன்னெ
டுக்க முடியாமைக் குரிய அடி
ப்படைக் காரணம் அவர்களு
டைய அரசியல் சித்தாந்தம்
தான். குறுகிய தேசியவாத
அரசியலில் சிக்கிக் கொண்டு
ள்ள புலிகள் இயக்கம் தற்
போது ஒரு வலதுசாரி
சர்வாதிகார அரசியல் ஆட்
சியை தமது
கட்டுப்பாட்டுக்குள் உள்ள
பிரதேசங்களில் நிறு
வியுள்ளது. தேசியவாதம், இன
வாதம் என்பவற்றுடன் ஆணா
திக்கம் எவ்வாறு பின்னிப்
பிணைந்துள்ளது என்பதை ஏற்
கனவே வெளிவந்த கட்டுரை
களில் பார்த்தோம். இவ்வகை
யான அரசியல் நிலைமையின்
கீழ் பெண்கள் நிலை மேலும்
மோசமடையப் போவதுடன்
போராட்டம் என்ற பெயரில்
பெருமளவு பெண்கள் அணி
திரட்டப்பட்டு யுத்தத்தில்
தொடர்ந்து பலியிடப்படப்
போகிறார்கள்.



நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டங்களை தனியார் மயமாக்கல் மலையக மக்களை தாக்கிடுமா..?



மலையக மக்களை எதிர் நோக்கியுள்ள ஒரு முக்கியமான பிரச்சினை பெருந் தோட்டங்களை முற்றாகத் தனியார் மயப்படுத்தும் அரசின் திட்டமாகும். இத்திட்டத்தின் சாதக, பாதகமான அம்சங்கள் மற்றும் மலையக மக்களின் தனித்து வங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றி எந்தத் தொழிற் சங்கமும் மக்களுக்கு எடுத்துச் சொன்னதாகத் தெரியவில்லை.இது பற்றிய விழிப்புணர்வு கூட ஏற்படவில்லை.

இலங்கை அரசு பெருந் தோட்டயாக்கத்தினாலும் (SLSPC), ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையாலும் (JEDB) நிர்வகிக்கப்படும் 452 பெருந்தோட்டங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பான அறிக்கையொன்று அமைச்சரவை முன் இப்போது உள்ளது. இப்பெருந் தோட்டங்களை 'மக்கள் மயப் படுத்துவது' (தனியார் மயப் படுத்துவதற்கு இந்த அரசின் நாமகரணம்) உண்மையானால் தோட்டங்கள் அனைத்தும் மலையக மக்களுக்குச் சொந்தமாக வேண்டும் என்பது 'மக்கள் மயப்படுத்தல்' என்று சொல் கிளப்புகிற சுவாரசியமான அர்த்தப்பரிமாணமாகும்! பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரை மக்கள் மயப்படுத்தல் என்ற பிரயோகத்தையே அரசு பாவிக்குமோ என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஏறத்தாழ 315,000 ஹெக்ரெயர் பெருந்தோட்டங்கள் இரண்டு கட்டங்களில் தனியார் துறையிடம் கையளிக்கப்பட இருக்கிறது. ஏற்கெனவே உள்ளூர் கொம்பனிகளான ஜோன் கீல்ஸ், ஹெயிலீஸ், மகாராஜா நிறுவனம் அயிற்கென் ஸ்பென்ஸீ, மேர்க்கன்டைல் கிறடிட் போன்றவையும் ஒரு சில பிரித்தானியக் கொம்பெனிகளும் வாங்குவதில் ஈடுபாடு காட்டுவதாகக் தெரியவருகிறது. ஒரு சில தொழிற் சங்கங்களும் கூட இதில் பங்கு பெறக் கூடும் என்றும் சில தகவல்கள்!

பெருந்தோட்டப் பயிர்களே இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 40% ஐ இன்னும் பெற்றுக் கொடுத்து வருவதாலும் சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி என்பனவற்றின் 'நெருக்கமும்' இந்த அரசை தோட்டங்களை தனியார் மயப்படுத்துகையைத் துரிதமாக்குகிறது.

முதலாவது கட்டமாக தனியார் துறை தோட்டநிர்வாகங்களைப் பொறுப்பேற்க அழைக்கப்படும் என்றும் வருமானத்தின் ஒரு பங்கு அவர்களுக்குக் கட்டணமாகத் தரப்படும் என்றும் தெரியவருகிறது. முழுப் பெருந்தோட்டப் பகுதியும் 12 பிரதேசங்களாக (ZONES) வகுக்கப்பட்டு 12 தனியார் துறையினரிடம் தரப்படும். தனியார் நிர்வாகம் பெருந்தோட்டங்களை லாப மீட்டக் கூடிய வகையில் உருவாக்கிய பிறகு இரண்டாம் கட்டமாக இந்தப் பன்னிரண்டு பிரதேசங்களும் வரையறுக்கப்பட்ட பொதுக் கொம்பனிகளாக மாற்றப்படும் என்று தெரிகிறது.

இப்போதைய அரச கூட்டுத்தாபன நிர்வாகம் பெருந்தோட்டங்களைச் சீரழித்து விட்டது என்று சொல்லப் படுகிற அதேவேளை ஏற்கெனவே தனியார் மயப்படுத்தப் பட்டுள்ள ஒரு சில தோட்டங்களில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மேலும் மோசமடைந்துள்ளது என்று அண்மையில் நடந்த ஆய்வரங்கொன்றில் தெரிவிக்கப்பட்டது

ஒரு கிலோ தேயிலை, கொழும்புச் சந்தைப் படுத்தலில் இப்போது 60 ரூபாய் பெறுகிறது என்றால் தனியார் மயப்படுத்துகையின் பிற்பாடு அது 80 ரூபாயாக உயரலாம் எனவும் இது இந்தியச் சந்தைப்படுத்தல் விலைக்குச் சமன் என்பது உண்மை. தனியார் மயமாக்கலை நியாயப்படுத்துபவர்களின் வாதப்படி, ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திச் செலவு 50 ரூபாய்கள், எனவே சந்தைப்படுத்தலில் 10 ரூபாய் லாபம் போதாது என்பது ஆகும். மேலும் சிம்பாப்வே, தன்சானியா போன்ற நாடுகள் ஒரு ஹெக்ரெயர் பரப்பில் 3,000, 2,000 கிலோ கிராம் தேயிலையை உற்பத்தி செய்கிற போது இலங்கை 1,200 கிலோ கிராம் தேயிலையையே ஒரு ஹெக்ரெயரில் உற்பத்தி செய்கிறது. அரசு நிர்வாகம், சந்தைப் படுத்தலில் நவீனத்துவமும் அக்கறையின்மை போன்ற காரணிகளால் சந்தையை நோக்கிய உற்பத்தியை இலங்கைப் பெருந்தோட்டயாக்கம் கொண்டிருக்கவில்லை எனவும் தனியார் மயப்படுத்தலே ஒரே வழி எனவும் இவர்கள் கூறுகின்றார்கள்.

தோட்டங்கள் பற்றிய பொருளாதாரப் பார்வை முக்கியமானது தான். ஆனால் தோட்டங்களுடனேயே காலங் காலங்களாகப் பிணைந்து விட்ட மலையக மக்களின் நிலை என்ன? தனியார் மயமாக்கலின் பின் அவர்கள் உதிரி உதிரிகளாக வீசப்படப் போகிறார்களா?

இதுவே 90 களில் எரியப் போகிற கேள்வி!

- நமது மலையக நிருபர்

## தேசிய விடுதலை...

| பீடங்கள் | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் |
|---|---|---|
| பொறியியல் (பேராதனை) | 227 | 250 |
| பொறியியல் (கட்டுபெத்தை) | 212 | 232 |
| மருத்துவம் | 229 | 250 |
| மிருக வைத்தியம் | 181 | 206 |
| பௌதிக விஞ்ஞானம் | 183 | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் | 175 | 184 |
| கட்டிடக்கலை | 180 | 194 |

அதைவிட வெளிப்படையான போராட்டம் என்றால் என்ன? ஆயுதப் போராட்டம் என்றால் என்ன? இரண்டினதும் முக்கியத்துவம் என்ன? இரண்டையும் எவ்வாறு இணைப்பது? என்பதில் தெளிவான விளக்கங்கள் எதுவும் இவர்களிடம் இருக்கவில்லை. உண்மையில் வெளிப்படையான போராட்டம், ஆயுதப் போராட்டம் என்ற இரண்டும் அரசியல் விடுதலைப் போராட்டத்தின் ஒன்றோடொன்று கலந்த இரு அம்சங்களாகும். இவ்விரண்டும் வளர்ச்சியடைகின்ற போதே போராட்டம் வெற்றியை நோக்கிச் செல்லும். வெளிப்படையான போராட்டங்கள் முன்னணியினரை இணைத்துக் கொள்வதற்கும், பரந்துபட்ட வெகுஜனங்களைப் போராட்டத்தின் பால் திரட்டிக் கொள்வதற்கும் சிறந்த பிரசாரச் சாதனமாக உள்ளது. அதேவேளை ஆயுதப் போராட்டம் எதிரியை நிலைகுலைய வைக்கவும், விடுதலையடைந்த பிரதேசங்களை உருவாக்கிக் கொள்ளவும் போராடும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவும் துணை புரிகின்றது. வெளிப்படையான போராட்டங்கள் மூலம் போதுமானளவு முன்னணிப் படையைத் திரட்டியதன் பின்னர் ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்கின்ற போதே அப்போராட்டம் கூடியளவு வெற்றியை நோக்கிச் செல்லும். இவ்வுண்மையை மாணவர் பேரவையினர் அறிந்திருக்கவில்லை.

(தொடரும்)

## படுகொலை...

ஏறாவூர் தொடர்.

அவர் தொடர்ந்து சம்பவத்தை விளக்கினார்; நான் உங்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் சொல்ல முடியும். ஓகஸ்ட் 12ம் திகதி நடந்த அழித்தொழிப்புக்குப் புலிகள் தான் காரணம். துவக்கு வெடிச்சத்தம் கேட்டபோது எனது வீட்டில் இருந்தவர்கள் 'ஆமியும் புலியும்' சண்டை பிடிப்பதாகத் தான் நினைத்தார்கள். எல்லோரும் எனது மைத்துனர் வீட்டில் குழுமினார்கள். புலிகள் அப்போது எமது மைத்துனர் வீட்டிற்கு வந்து அவரைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள். அவர், பலிகள் களைத்திருக்கக்கூடும், தண்ணீர் கேட்டுக் கூப்பிடுகிறார்கள் என நினைத்துக் கொண்டு வெளியே போனார். கூப்பிட்ட அதே புலிகள் தான் முன்பு வந்து சாப்பாட்டுப் பார்சல் எடுத்துச் சென்ற வர்கள், அவர்களுடைய பெயர் கள் தெரியாவிட்டாலும் எங்களில் இன்னும் உயிருடன் இருப்பவர்கள் இதற்குச் சாட்சி சொல்ல முடியும். பிறகு எல்லோரும் வெளியே இழுத்து வரப்பட்டார்கள்–சிறுவர்கள் உட்பட! சுவரைப் பார்த்து நிற்குமாறு அவர்களுக்குக் கட்டளையிடப் பட்டது. 'நிலைமை மோசமாகிறது எனப்புரிந்து கொண்ட எனது மைத்துனர்–அவர் ஒரு தமிழ் கவிஞர்! – முழங்காலில் நின்று கெஞ்சினார். புலிகள் சுடத்தொடங்கிய போது அவர் முழங்காலில் நின்றபடியே விழுந்து இறந்தார். எனது தகப்பனார். தாய், இரண்டு மூத்த சகோதரிகள், எனது ஒரு மூத்த சகோதரியின் மகளையும், மகளையும் அணைத்தபடி இறந்து போனார்கள். மகள் பிறகு இறந்தாள், மகன் ஒருவாறு தப்பி விட்டான் தப்பியது இந்தப் பையன், எனது மாமா, எனது 19வயது சகோதரி ஒருவர் ஆகியோரே! இவர்களும் படுகாயமடைந்து இருந்தார்கள். இறந்து போன என் குடும்பத்தைச் சேர்ந்த பதின்மூன்று பேரில் ஏழுபேர் சிறுவர்கள். அதில் ஒன்று ஒருவயதும், இன்னொன்று நாலே நாலு மாதமும் நிரம்பிய குழந்தைகள்!

எனது சகோதரி பிறகு தெற்கில் என்னுடன் வந்து தங்கியிருந்து மருந்து எடுத்தார். எனது தகப்பனாரையும் தாயாரையும் பலி எடுத்த இந்த மிருகங்கள் இந்த உலகில் எனக்கு எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியமானவர்கள். நான் அவர்களை உணர்வற்ற இதயமற்ற மிருகங்கள் என்றே அழைப்பேன். அவர்கள் ஏறாவூருடனான எனது தொடர்பை முற்றாக இல்லாமல் செய்துவிட்டனர். நான் இந்த உலகில் ஒரு அனாதையாக்கப்பட்டுள்ளேன். ஏறாவூருக்குப் போய் எனக்கு உணவு தேவை என்று கேட்டால் எனக்கு இப்போது அதைத்தர யார் இருக்கிறார்கள்? அவர்கள் எனது குடும்பம் இருந்த இடத்தில் முப்பது பேரைக் கொன்றிருக்கிறார்கள். இங்கு தான் கொலை மிகவும் அதிகமாக நடந்தது என்பேன் நான்.

"புலியில் இருந்த எனது தம்பி, இந்தக் கொலைகள் நடக்கும் போது கொக்கட்டிச் சோலையில் இருந்தார். இது இராணுவத்தால் செய்யப்பட்டது என்று புலிகளால் அவனுக்கு கூறப்பட்டதாம்! ஆனால் அவர் இதுபற்றிய உண்மையை மூன்றுநாட்களுக்குப் பின் முழுமையாகத் தெரிந்து கொண்டார். அதன்பின் அவனால் புலிகளுடன் இருக்க முடியவில்லை. தப்பி ஓடி இராணுவத்தில் சரண் புகுந்தான். அவன் இப்போது கொழும்பில் இருக்கிறான். பல முஸ்லிம் புலி உறுப்பினர்கள் விலகினார்கள். இராணுவத்தில் சரணடைந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இவர்களில் பலர் இரகசிய தகவலடிப்படையில் பிறகு இராணுவத்தால் பிடிக்கப்பட்டு பின் கொல்லப் பட்டார்கள்.

"புலிகள் ஏன் எனது குடும்பத்தைக் கொன்றார்கள்? நான் முழுமையாக நம்புகிறேன் காரணம் நாங்கள் புலிகளுடன் தொடர்புடையவர்களாக இருந்ததுதான் என்று. புலிகளுடன் தொடர்புடையவர்களை கொன்றால் அந்தப் பழி ஆமி மீது விழும் என அவர்கள் நினைத்திருக்கிறார்கள். இதில் அவர்களது தப்பான முடிவு அவர்களை தோல்வியடைய வைத்துவிட்டது. புலிகளின் நோக்கம் முஸ்லிம்களை அடிமைகளாக்குவதுதான். ஏறாவூர், அண்மையில் தான் படித்தவர்களை உருவாக்குவதில் கொஞ்சம் வெற்றி பெற்றது. அவர்கள் எமது பகுதி கொத்தணி அதிபர் தாவூதை ஏன் கொன்றார்கள்? ஏனென்றால் அவர்களுக்குப் படித்த முஸ்லிம்களை இல்லாதொழிப்பது தேவையாக உள்ளது. புலிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் சமாதிதானம் ஏற்பட ஒரு சாத்தியமும் இல்லை என்றே நினைக்கிறேன். யாராவது ஒரு முஸ்லிம் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தால் அவர் ஒரு முஸ்லீமே அல்ல. முஸ்லீம்கள் இவ்வளவு மோசமாக அவமதிக்கப்பட்டது வெறெங்கும் இல்லை! இஸ்ரேலிய மொசாட் கூட பள்ளிவாசல் தொழுகையில் இருக்கும் மக்களை கொல்லவில்லை. இந்த மிருகங்கள் அதையும் செய்தார்கள். இங்கு ஒரே தீர்வு தான் இருக்க முடியும்......... அதாவது முஸ்லிம்கள் தமக்கென ஒரு பிரதேசத்தை ஸ்தாபிப்பது......"

நன்றி - நூலகத்திட்டம்

# கவனமில்லாமல் இருந்த போது அந்தச் சாகசக்காரன் என்னை....

சஞ்ஜித்

## கூரையைத் துளைத்து...

"குண்டுகள் வந்து கூரையைத் துளைத்தாலும் என்று கட்டிலின் அடியினிலே பிள்ளையைப் பெண்டிலை நான் தள்ளியே சாக்கால் மூடிப் பதுங்கியே பதகளிப்பேன்."

இது நெல்லை க. பேரன் எழுதிய கவிதையிலிருந்து எடுத்த ஒரு பகுதி.

என்ன துர்ப்பாக்கியம். குண்டுகள் கூரையைத் துளைத்து கொண்டு (ன்று) தான் போயிற்று. பேரனையும் அவரது மனைவியையும் குழந்தைகளையும்!

பருத்தித்துறை கடலிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டோ அல்லது ஐயாயிரம் அடிகளுக்கு மேலிருந்து விமானத்திலிருந்து போடப்பட்ட குண்டோ எதுவோ அவரையும் அவரது குடும்பத்தவரையும் புலியாக இனங்கண்டு தாக்கிற்று; யுத்தம் புலிகளுக்கு மட்டுமே எதிரானது என்ற அரசின் கூற்றுப்படி.

அறுபதுகளின் மத்தியில் எழுதவாரம்பித்த பேரன் ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் (1975), சத்தியங்கள் (1987) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும், வளைவுகளும் நேர்கோடுகளும் (1978), விமானங்கள் மீண்டும் வரும் (1986) ஆகிய நாவல்களையும், பேரன் கவிதைகள் (1989) என்கிற கவிதை நூலையும் வெளியிட்டுள்ளார்●

## ரஞ்சன்குமாரையும்...



கூரையைத் துளைத்த மரணம் இன்னுமொன்று. யாழ் பல்கலைக் கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கு. ரஞ்சன்குமாரையும் கொண்டு போயிற்று. சாவகச்சேரியிலுள்ள அவரது வீட்டுக்கு வந்த ஷெல்! யுத்தம், புலிகளுக்கு மட்டும் எதிரானது தானா?

## படுகொலை....

கொக்கட்டிச் சோலை

தொடர்.

வேலப் போடி அழகிப் போடி (53 வயது) மெதடிஸ்த தேவாலயத்தின் புறமிருந்து ஏழு படையினர் வருவதைக் கண்டிருக்கிறார். பின்னர் ஐந்து படையினர் மில்லினுள் நுழைவதையும் கண்டுள்ளார். மில்லினுள்ளிருந்து வெடிச் சத்தங்களையும் அவர் கேட்டார். படையினர் சென்ற பிறகு மில்லினுள் போய்ப் பார்த்த அழகிப்போடி ஏழு உடல்களையும் படுகாயமுற்ற ஐந்து பேரையும் கண்டார். காயப்பட்டவர்கள் தண்ணீர் கேட்டபோது அவர்களுக்காகத் தண்ணீர் எடுத்து வருகையில் வேறு ஆறு படையினர் அழகிப் போடியைக் கண்டு விட்டார்கள். எவ்வளவு உடல்கள் உள்ளே இருக்கின்றன என்று அழகிப் போடியைக் கேட்ட படையினர் காயமுற்றிருந்தவர்களை வெளியே கொண்டு வருமாறு அவரைப் பணித்தார்கள். காயப்பட்டவர்களை வண்டியில் ஏற்றி அனுப்புவதற்காக தம்பின்னால் வரும்படி சொல்லி விட்டுப் படையினர் முன்னே நடக்கத் தொடங்கியதும் மெல்லத் தப்பி ஓடி வந்த அழகிப் போடி அதே ஆறு படையினரும் மீளவும் வருவதைப் பார்த்தார்.

வந்த படையினர் மேலும் முப்பத்தைந்து பேரைப் பிடித்து வந்து மில்லினுள் தள்ளி விட்டு ஏற்கெனவே காயப்பட்டிருந்த ஐவர் உட்பட அனைவரையும் சுட்டுக் கொன்றார்கள். மில்லினுள் கொல்லப்பட்டவர்களுள் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு தாயும் அடங்குவார்.........

பின்னர் முதலைக் குடாவிலிருந்து பதினேழு இளைஞர்கள் கூட்டிச் செல்லப்பட்டு கண்ணி வெடியால் பூமி திறந்து ஏற்பட்டிருந்த பெருங்குழியினுள் சுட்டுத் தள்ளப்பட்டு எரிக்கப் பட்டார்கள்.....

கடந்த யூலை 29ம் திகதி இந்தியாவின் வெளிநாட்டமைச்சர் மாதவசிங்சோழங்கிக்கும் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஹெரால்ட் ஹேரத்திற்குமிடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது.

இலங்கை இந்திய கூட்டு ஆணைக்குழு ஒன்றை எதிர் காலத்தில் நியமிப்பதற்கான ஒரு உடன்படுதல் படிவமே இத்தேதியில் கைச்சாத்தானது. இதன்படி அமையவிருக்கும் கூட்டு ஆணைக் குழுவின் இணைத் தலைவர்களாக இந்திய இலங்கை வெளிநாட்டமைச்சர்கள் இருப்பர் என்றும், இவர்களின் கீழ் இரண்டு உப ஆணைக் குழுக்கள் நிறுவப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உப ஆணைக்குழுக்களில் ஒன்று வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் முதலீடு சம்பந்தப்பட்டது. மற்றையது கலாசாரம், கல்வி சமூக விஞ்ஞானம் சம்பந்தப்பட்டது.

முன்னாள் இந்திய வெளிநாட்டமைச்சர்சுக்ளா இங்கு வந்திருந்த போது முடிவு செய்யப்பட்ட இவ் ஆணைக் குழு விடயம் அதன் முதல் கட்ட உடன் பாட்டுக்கு வந்துள்ள போதும், இந்த ஆணைக் குழுவின் முழு அளவிலான திட்டங்கள், நடவடிக்கைகள் எவையெவை என இதுவரை தெளிவாக வரையறுக்கப் படவில்லை.

கொழும்புப் பத்திரிகைகள் இந்த ஆணைக்குழுவை ஏதோ முக்கியத்தும் வாய்ந்த ஒன்றாகப் பெரிதுபடுத்தி வெளியிட்ட போதும், இதுவரை இது தொடர்பான எந்தத் தகவலும்-குறிப்பாக ஒப்பந்தம் உள்ளடக்கும் விடயங்கள் எவை என்பது-தெரியாததால் இதன் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வது கடினம் என்று கொழும்பின் புகழ் பெற்ற சட்ட ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். ஆயினும் இந்தியாவின் இந்த ஒப்பந்தம் தொடர்பான அக்கறையை கவனிக்குமிடத்து இது 1987ல் இதே தேதியில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் போல சில முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவரும் என ஊகிக்க இடமுண்டு.

இந்தியாவின் புதிய அரசின் வருகைக்குப்பின்னர் இரு தடவை அறிவிக்கப்பட்ட நாணய குறைப்பும், திறந்த பொருளாதார கொள்கையை இந்தியாவுக்கு அமுல்படுத்துவதில் உள்ள பிரதமர் நரசிம்மராவோ மற்றும் நிதியமைச்சர் மன்மோகன் சிங் ஆகியோருக்கு உள்ள அக்கறையும் இதையிட்டு ஒருவர் அக்கறையற்று இருந்து விட முடியாதென்பதையே காட்டுகின்றன.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணைகள் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை வளர்ந்தபின் அப்பால் செல்லாமல் ஸ்தம்பித்து நிற்பதும் தகவல்கள் கிடைக்கக்கூடிய விதத்தில் விசாரணைகள் நகர்வதற்குப் பதில் சில முன்கூட்டிய முடிவுகளை நிரூபிக்கும் விதத்தில் அவை நகர்வதாக இந்தியப் பத்திரிகைகள் குற்றம் சாட்டி வருவதும் கவனத்துக்குரியவைகளே. சி. பி. ஐ இரகசியப் பொலிசாரால் புலிகளின் ஆதரவாளர் என்று கைது செய்யப்பட்ட வேதாரணியத்தை சேர்ந்த சண்முகம் என்பவர் திடீரென சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக சொல்லப்படுவதை மறுத்த அவரது குடும்பத்தினர் அவர் அடித்துக் கொல்லப்பட்டு தூக்கப்பட்டுள்ளார் என்று ஆதாரங்களுடன் தெரிவிப்பதாகவும் பத்திரிகைகள் சொல்கின்றன. ராஜீவ் கொலையில் அமெரிக்க சி. ஐ. ஏ மற்றும் சர்வதேச ஆயுதக் கடத்தல் காரனான கசோகி ஆகியோரது பங்கு குறித்தும் பத்திரிகைகள் சந்தேகம் எழுப்பியுள்ளன. புதியபிரதமர் ராவோவுக்கும் கசோகிக்குமிடையில் நல்லுறவு இருப்பதாகவும் அவை சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் அதிகார பூர்வ விசாரணைகள் இதற்கு நேரெதிர் திசையில் செல்வதாக தெரியவருகிறது.

உலக வங்கியின் (IMF) நிபந்தனையின்படியே ரூபாய் மதிப்பிறக்கம், திறந்த பொருளாதார கொள்கை அறிவிப்பு, அரசுத்துறைகள் தனியார் மயமாக்கல் முயற்சி, மானியங்களை வெட்டுவது போன்றவற்றை புதிய இந்திய அரசு அறிவித்துள்ளதாக பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றன. உள்நாட்டுக் கடன் மட்டுமே 1,30,000 கோடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரியில் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே போதுமாக இருந்த அந்நியச் செலாவணி உலக வங்கியின் உதவியால் சமாளிக்கப்பட்டது! இந்தப் பின்னணியில் புதிய ஒப்பந்தம் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு-குறிப்பாக பிராந்திய நாடுகள் குறித்த இந்தியாவின் கடந்தகால அணுகுமுறை சம்பந்தமான அனுபவம் உள்ளவர்கட்கு - இந்திய ஒப்பந்தம் குறித்து இரண்டு விதமான சந்தேகங்கள் தலைதூக்கலாம்.

1. தலைக்குமேல் ஏறிவிட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீழ இந்தியா பிராந்திய நாடுகளின் மீது நம்பிக்கைவைக்கலாம். அதாவது இந்த அரசுகளை நயத்தாலோ பயத்தாலோ தனக்கு உடன்பட வைத்து அவற்றின் வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை தனக்கூடாக கையாள உடன் படவைக்கலாம். இது ஓரளவுக்கு அதன் சுமையை தவிர்க்கும்.

2. தனது இந்த நடவடிக்கையால் அந்நாடுகளில் கூடிய உள்நாட்டு நெருக்கடிகளை சமாளிக்க கலாசார கல்வி விடயங்களில் உதவி செய்வதன் மூலம் அதை சமாளிக்கலாம். இத்துறைகள் இந்தியாவின் பால் இந்நாடுகளின் மக்களுக்கு நல்லுறவு இருக்குமாறு பார்த்துக் கொள்ளும்.

இந்தச் சந்தேகங்களுடன் இந்த - இந்திய சார்பிலேயே முதலில் சுக்ளாவால் முன்மொழியப்பட்ட இந்த - ஒப்பந்தம் பற்றி யோசிக்கும் போது அவை அதற்காகவே உருவாக்கப்பட்டது போல தெரிகின்றன.

1987 யூலை ஒப்பந்தம் இது பற்றிப் பேசுவது பலருக்கு கசப்பாக இருக்கிறது. ஆனால், கசப்பாக இருந்தபோதும் உண்மை அதுதான்) இலங்கை அரசை நிர்ப்பந்தித்து எழுதப்பட்டதே என்பதும் அவ்வொப்பந்தம் இலங்கை அரசிற்கு தனது நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குப் பிரதி உபகாரமாக இரண்டு விடயங்களை ஒப்புக் கொண்டது என்பதும் வெளிப்படை. அதாவது:

1. இந்தியாவிலுள்ள பிரிவினைக்காக போராடும் அனைத்து இலங்கைப் பயங்கர வாதிகளையும் வெளியேற்றுவது.

2. இலங்கை அரசுக்கு இராணுவ தளபாட உதவிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவது.

ஆனால் இதற்குப் பதிலாக இந்தியா இலங்கையிடம் எதிர் பார்த்தவைகளோ.

1. இலங்கை இந்திய உறவுக்கு குந்தகமான முறையில் எந்த வெளிநாட்டு இராணுவ உளவு வேலைகட்கும் அனுமதி வழங்காமை.

2. இந்திய நலனுக்கு குந்தகமான விதத்தில் திருகோணமலை மற்றும் இதர துறைமுகங்களை எந்த நாட்டினதும் இராணுவ தேவைகட்கு வழங்காமை.

3. திருகோணமலை எண்ணெய்க் குதம் பராமரிப்பு வேலை இலங்கை இந்திய கூட்டு இணைப்பால் செய்யப்படும். (இது ஒரு அமெரிக்க கம்பனியால் நிர்வகிக்கப்பட்டது!)

4. இலங்கையில் உள்ள அந்நிய ஒலிபரப்பு நிலையங்கள் வெறும் சாதாரண தகவல் காரணத்திற்காக மட்டுமா என்பது குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டும்.... !

உண்மையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் எல்லோரும் நம்புவது போல இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவோ இலங்கையில் சமாதானத்தை கொண்டுவரவோ செய்யப்பட்டதல்ல. மாறாக இந்தியாவின் நலனுக்கு இசைவாக பயன்படுத்தப்பட்டது என்பதே உண்மை என்பது ஒப்பந்தத்தை கவனமாகப் பார்ப்பவர்களும், அதன் பின்னாள் விளைவுகளை உற்று நோக்குபவர்களும் புரிந்து கொள்வர்!

இதே ஒப்பந்தம் பின்நாளில் ஒரு 'சமனற்ற' ஒப்பந்தமாக இலங்கை அரசியல்வாதிகளாலும் பத்திரிகைகளாலும் விமர்சிக்கப்பட்டது பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

தமிழ் குழுக்களால் திம்புவில் முன்வைக்கப்பட்ட.

1. தேசிய இன அங்கீகாரம்
2. பாரம்பரிய பிரதேச அங்கீகாரம்
3. சுயநிர்ணய உரிமை அங்கீகாரம்
4. அனைத்து தமிழ் மக்களுக்கும் பிரஜா உரிமை வழங்குதல் என்ற கோரிக்கையில் ஒன்றைத்தானும் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றவில்லை என்பதே இதன் நோக்கம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதல்ல. இந்திய நலனை பாதுகாப்பதே என்பதைத் தெளிவாக்குகிறது.

இப்போது எழுதப்படவுள்ள புதிய ஒப்பந்தம் இந்த ஒப்பந்தத்தின் ஒரு தொடர்ச்சி அல்லது விரிவாக்கமாகவே அமையப் போகிறது என்பதும், இது முன்னைய ஒப்பந்தத்தின் சமனற்ற தன்மையை மாற்றப் போவதில்லை என்பதும், அந்தச் சமனற்ற தன்மை குறித்து தாம் கவனத்திலெடுப்பதாக அறிவித்த இந்திய அரசு அது பற்றி எதையும் செய்யவில்லை என்பதும் இலங்கை அரசுக்கோ, இங்குள்ள இந்திய ஒப்பந்தத்தை துதிபாடும் பிற (தனிப்பட்ட) கட்சிகளுக்கோ தெரியாமலில்லை. தெரிந்தும் கூட இந்த புதிய ஒப்பந்தம் குறித்தும் 'ஆவலோடு எதிர்ப் பார்க்கிறார்கள் இவர்கள்.'

வரலாறு தொடர்ந்து இயங்குகிறது. அதிலிருந்து கற்றுக் கொள்கிறவர்கள் பிழைத்துக் கொள்வார்கள். மற்றவர்கள் மக்கள் முன் தலைகுனியும் நேரம் வருகிறபோது வரலாறு அவர்களை குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசி விடுகிறது.

மார்க்கஸ் ஒரு முறையில் எழுதினார்; 'நான் கவனமில்லாமல் இருந்தபோது அந்தச் சாகசக்காரன் என்னைக் கற்பழித்து விட்டான் என்கிற பெண்ணையோ தேசதத்தையோ யாரும் மன்னிக்கப் போவதில்லை!'

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திப்புகள்



## சதாவதானன்

அவரை நான் இதற்கு முதல் பலதடவைகள் சந்தித்திருக்கிறேன் என்று மட்டும் ஞாப கம் இருக்கிறது. ஆனால் யார்? பெயர் என்ன? என்ற விபரங்கள் உடனடியாக ஞாபகத்தி ற்கு வரவில்லை.

தடித்த மூக்குக் கண்ணாடி முற்றாக சவரம் செய்து மெல்லியதாக வளர்ந்திருந்த ரோமம். தலையில் உச்சியில் வட்டமாக மெல்லிய வழுக்கை விழுந்திருந்தது.

வெள்ளை நிற அரைக்கை சட்டையும் கறுப்புநிற நீளக்காற் சட்டையும் போட்டிருந்தார்.

அன்றைய ஆங்கிலத் தினசரியுள் மூழ்கியபடி இருந்த அவரை நீண்ட நேரம் அவதானித்துக் கொண்டிருந்த போதும் சரியாக ஞாபகத்தைத் தெளிவாக்கிக் கொள்ள முடியவில்லை.

மனது துறுதுறுத்தது. போய்ப் பேச்சுக் கொடுப்போமா என்று யோசித்தேன். எப்படிப் பேச்சுக் கொடுப்பது? யாரென்று ஞாபகத்துக்கு வராத ஒருவருடன் வலியப் போய் பேசத்தொடங்குவது ஒரு சங்கடமான விடயமல்லவா? தப்பித்தவறி அவரும் என்னைப் போலவே என்னை அடையாளம் காணாதவராக இருந்துவிட்டால். அப்போது உருவாகிற நிமையை எப்படி சமாளிப்பது.......'

போகவா விடவா என்ற போர்ாட்டம் ஒரு மணிநேரமாக என்னுள் நடந்து கொண்டிருந்தது. ஒரு தீர்மானமும் எடுக்க முடியவில்லை.....

இது நடந்தது ஒரு ரெயில் பிரயாணத்தில். வடக்குக்கு ரெயில் போகாமல் விட்டு ஓராண்டு முடிந்துவிட்ட போதும், மற்றப்பகுதிகளுக்கு ரெயில் ஒழுங்காக - அதன் வழமையான ஒழுங்குடன் ஓடிக்கொண்டுதான் இருந்தது. கண்டி நோக்கி போய்க் கொண்டிருந்த இந்த இன்ரசிற்றி புகைவண்டியில் இருவரும் பிரயாணம் செய்வதை வைத்துக் கூட என்னால் இவர் யாராக இருப்பார் என்று ஊகிக்க முடியவில்லை.

ஜன்னல் புறமாக திரும்பி, மனதை ஓடவிட்டபடி வெளியே பார்த்தபடி இருந்தேன். கையிலிருந்த புத்தகத்தில் கூட மனது லயிக்கவில்லை. பக்கங்களைப் புரட்டினாலும் அவர் யார் என்று அறிவதில் மனம் அலைக்கழிந்ததே ஒழிய ஒரு பக்கத்தைக் கூட படிக்க முடியவில்லை.

அவரோ பத்திரிகையின் ஒவ்வொரு வரியையும் நிதானமாகப் படித்துக் கொண்டிருந்தார். பத்திரிகையை முடித்துவிட்டு நிமிர்ந்தாலாவது அவரது கண்ணில் படுகிற மாதிரி முகத்தை வைத்துக் கொண்டால் சிலவேளை அவரே கூட என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்ற நினைப்புடன் அவரையே பார்த்தபடி இருந்தேன்.

உஹும். மனிதன் பத்திரிகையிலிருந்து கண் எடுத்த பாடாய்காணோம்.

அப்படி என்னதான் இந்தப் பத்திரிகையில் இருக்கிறதோ என்று எரிச்சலாக வந்தது.

எழுந்து அவரை நோக்கி நடப்பதாக நான் முடிவு செய்து கொண்டேன்.

அதற்கிடையில் எனக்கு வாய்ப்பாக ஒரு சம்பவம் நடந்தது. இவருக்கு எதிர்த்தாற் போல் இருந்த ஆசனத்தில் இருந்தவர் இவரைத் தட்டி பத்திரிகையைக் கேட்டார்.

படித்துக் கொண்டிருந்த சுவாரஸ்யம் திடீரெனக் கெட நிமிர்ந்து பார்த்துவிட்டு அவசர அவசரமாகப் பத்திரிகையை மடித்துக் கொடுத்தார் இவர்.

'ஓ.... பத்திரிகை இவருடையதல்ல. அதுதான் இவ்வளவு சுவாரஸ்யமாகப் படித்திருக்கருரோ?' - எனது கோணல் புத்தி இப்படி யோசித்தது.

பத்திரிகைக்காரர் எழும்பி இறங்குவதற்காக வாசல்பக்கமாக நடந்தார்.

நான் எதுவும் தெரியாதவன் போல நடந்து போய் அந்த இருக்கையில் இருந்தபடி கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்தேன் "அது என்ன புத்தகம்" என்றுர் இவர்.

நான் எதிர்பார்த்தது பலித்துவிட்டது என்ற நினைப்புடன் அவரை நிமிர்ந்து பார்த்து புத்தகத்தை நீட்டினேன்...."

'ஓ.... நீரா?' என்று என்னை அவர் அடையாளம் காணுவார் என்ற எனது எதிர்பார்ப்பில் மண்ணை வீசிவிட்டு அவர் புத்தகத்தைப் புரட்டத் தொடங்கினார்.

நான் அவரை கூர்ந்து கவனித்தபடி இருந்தேன். நிச்சயமாக இவர் ஒரு இலக்கியக் காரராக இல்லாவிட்டால் புத்தகத்தில் ஒரு பந்திக்கு மேல் படிக்க மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு.

நான் எதிர்பார்த்தது நடக்கவில்லை. அவர் படிக்கத் தொடங்கிவிட்டார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. 340 பக்கங்கள் கொண்ட அந்தப் புத்தகத்தை முழுவதுமாகப் படிக்க அவருக்கு எங்கே முடியப் போகிறது? ஒரு பத்துப் பக்கம் வாசித்து முடிக்கப்படு முன்னர் கண்டி வந்துவிடும். அப்படி இருக்க இதைப் படிப்பதில் அவர் இறங்குவதைப் பார்த்து எப்படி ஆச்சரியப் படாமல் இருக்கமுடியும்....? ஆனால் இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு நான் பேச ஆரம்பித்தேன்.

"உது நீங்கள் ஒரு பத்து பக்கம் படிக்க முதலே கண்டி வந்திடும்..... இது தனிக் கட்டுரை...." என்று இழுத்தேன்.

அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார். பிறகு மெல்லியதாக சிரித்தபடி 'படிக்கிறளவுக்கு லாபம் தானே' என்றார். எனக்கு குட்டிவிட்டது போல் இருந்தது. மனிதன் லாபம் நட்டம் பார்க்கிற காரியக் காரன்தான்!

'சரி அப்ப படியுங்கோ' என்று நான் சொல்ல நினைத்தேன். அவர் புத்தகத்தை திருப்பி தந்து விட்டு சாவகாசமாக பின்புறமாக சாய்ந்து கொண்டார்.

இந்த மனிதரை எப்படிப் புரிந்து கொள்வது என்று எனக்கு விளங்கவில்லை.

நான் ஒரு சிகரட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டு அவருக்கு நீட்டினேன்.

ஆவலுடன் அதை வாங்கிப் பற்றவைத்துக் கொண்டார். அதன் பின் உருவான சகஜமான சூழலில் நான் அவரிடம் பேசத் தொடங்கினேன். 'உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு'.

'பார்த்திருப்பீர், நான் அடிக்கடி இந்த ரெயினிலை வாறனான்'

"அப்படியில்லை வேறெங்கேயோ...."

ஐரோப்பிய பாணியில் தோளைக் குலுக்கினார். புகையை ஆழமாக உறிஞ்சியபடி கேட்டார் 'நீர் ஒரு எழுத்தாளரா?'

"ஓம்....." என்று ஒருவகை வெட்கத்துடன் முணுமுணுத்தேன். என்னை ஒரு எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்கிற போதெல்லாம் எனக்கு கூச்சமாக இருக்கும்.... ஆனால் இவருக்கு எப்படி அது தெரியும் என்று அடுத்த கணமே எனக்கு கேட்கத் தோன்றியது.

"ஏன் கேட்கிறியள்...."

'இல்லை. ஒரு நாள் உம் மோடையும் உம் மட தாடிக் காற Friend ஒடையும் நான் கதைச்சது ஞாபகமிருக்கே கொழும்பிலை....'

இப்போது எனக்குப் பளிச்சென ஞாபகம் வந்தது.

'ஓமோம்.... ஆனால் எனக்கு அடையாளம் காணமுடியேல்லை'

ஆனால் எனக்கு உம்மை கண்டவுடனேயே தெரிஞ்சுட்டுது' என்றார் அவர்.

ஆள் சுத்தமான அழுத்தப் பேர்வழி தான் என்று நினைத்துக் கொண்டேன். அவருடன் பேசிய விஷயங்கள் ஞாபகத்துக்கு வந்தன. புலிகளின் பனிரெண்டு மாதகால பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த காலம் அது. இப்போது யுத்தம் தொடங்கிப் பனிரெண்டு மாதமாகிவிட்டது. கொழும்பில் நடந்த மலையக மக்கள் தொடர்பான கருத்தரங்கொன்றின் பின் அவருடன் அந்த உரையாடல் நடந்தது. தேநீரை அருந்தியபடி புலிகளின் பேச்சுவார்த்தையால் உண்மையில் லாபமடைவது அரசாங்கமே என்று நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது இவர் தனது கருத்துடன் குறுக்கிட்டார்.

'அப்படி சொல்லேலாது, பொறுத்திருந்து பாருங்கோவன், புலியள் இந்த அரசாங்கத்துக்கு நிரந்தரமாக வால்பிடிக்கிறுங்களா அல்லது இது ஒரு tactics ஆ என்று தெரியும்! அப்ப தெரியும் ஏமாந்தது யார் எண்டு...."

இதற்குப்பிறகு நாம் அவருடன் நிறைய விவாதித்தோம். 'மொத்த விளைவு அரசுக்கு சாதகமாகவும் தமிழ் மக்களை மேலும் மோசமாக பாதிப்புக்குள்ளாக்கவும் தான் உதவப் போகிறது' என்ற எனது கருத்தை அவர் கடைசிவரை அங்கீகரிக்கவில்லை. இப்போது அவரை சந்தித்து அவர் ஞாபகப்படுதியதும் அவ்வளவும் ஞாபத்துக்கு வந்தன.

'என்ன யோசிக்கிறீர்...? "அண்டையான் விஷயங்களை யோசிச்சுப் பாத்தன்...."

'எப்படி, நான் சொன்னேன். பாத்தீங்களா? இப்ப என்ன சொல்லுறியள்... கொக்காவில், கோட்டை எல்லாம் போட்டுது. முல்லைதீவு காரைநகர் பரலைஸ்ட். அடுத்தது ஆனையிறவு தான்... அதுவும் போயிடும்...'

"எனக்கு இவரது கதையைக் கேட்க என்ன செய்வதென்றே புரியவில்லை, நாங்கள் அன்று சொன்ன விஷயமும் இவர் சொல்கிற விஷயமும் ஒன்றா இல்லையே.... நாங்கள் சொன்னது மொத்தத்தில் வரப் போகிற பின்னடைவு பற்றி. அது சரிதானே? அரசு இப்போது நடாத்திக் கொண்டிருக்கிற யுத்தத்தை நன்றாக நியாயப்படுத்துகிறதா இல்லையா? சர்வதேச மற்றும் உள்நாட்டு அளவில் அது நியாயப் படுத்தப்பட்டுள்ளது தானே.....

"நியாயப்படுத்தல் எத்தினை நாளைக்கு? உப்படியான கஸ்டங்கள் சனத்துக்கு வராமல் போராட்டம் வெல்லேலாது. எப்படியும் இருந்து பாருங்கோ கடைசியிலை ஆருக்கு வெற்றி எண்டு" "மக்கள் படுகிற கஷ்டத்தை அவ்வளவு லேசா நினைக்கிறியளோ? குறைந்த அழிவோடை யுத்தத்தை நடாத்தியிருக்க முடியாதா? அரசியல் சாணக்கியம் இருந்திருந்தால்..."

"அரசியல் சாணக்கியம் இருக்கிறதாலைதான் இப்படி நடக்குது. இல்லை எண்டால் இதை விட மோசமாக இருந்திருக்கும்....." இதற்குமேல் இவருடன் விவாதிப்பதில் அர்த்தமில்லை என்று பட்டது. எனவே நான் மௌனமானேன். பேசுவதற்கு நான் அவதிப்பட்டதை நினைத்து என்மீதே எனக்கு அனுதாபமாக இருந்தது.

அவர் கேட்டார், "ஏன் பேசாமல் இருக்கிறீர். எங்கடை நாட்டுக்குரிய தனி வழியில அவங்கள் போராடுறாங்கள். எந்தப் பிழையும் ஒரு பெரிய வெற்றிக்குப் பிறகு வெளியிலை தெரியாது. வெளியிலை வந்தாலும் அது முக்கியமில்லை... வெற்றிதான் முக்கியம். இப்ப சனத்துக்கு கொஞ்சம் கஷ்டம்தான். ஆனால் கஷ்டப்படாமல் முடியுமே.... முஸ்லிம்களை விரட்டினது. மற்றக்கட்சியறை தாக்கினது எல்லாம் பெரிய விசயமாகப் பேசப்படுகுது. ஆனால் அதைப்பற்றிப் பேசுறவை மற்ற விஷயங்களை மறந்திடீனம். கொக்கட்டிச் சோலை பற்றி கதைக்காயினம் அரந்தலாவையைப்பற்றி பேசுவினம்... எல்லாப் பிழையளையும் சரிக்கட்டியிடலாம். அவை எவ்வளவு பெரிசா இருந்தாலும்....

ஆனால் துரோகம் செய்தால் அதை சரிக்கட்டேலாது...'

படித்தவர்களும் பெரியவர்களும் போராட்டம் தொடர்பாக கொண்டுள்ள மெத்தனமான, அக்கறையற்ற போக்கு ஒருபுறமும், எல்லாவற்றையும் நியாயப்படுத்தியே பழகிப் போன ஒருவகை அதிகாரத்துவ சிந்தனையின் ஆதிக்கமும் முற்றக தேசத்தை ஆக்கிரமித்துள்ள போது சரிதவறு பற்றி யார் அக்கறைப்பட போகிறார்கள்? உண்மையும் நியாயமும் யாருக்கு முக்கியம்? ஒரு உண்மைக்காக ஆயிரம் உண்மைகளை பலியிட முடியும் என்ற கருத்து, அது உண்மையாகவே 'உண்மை' தானா என்பதையும், அதை அடைந்துவிட முடியுமா என்பதையும் பெரிய சந்தேகமாக கிளம்பியுள்ளது. ஆனால் இது அக்கறைப்படுகிறவிடயமா என்ன? நியாயப்படுத்தும் எழுத்தாளர்களும் அறிவாளிகளும் நிலமையை குட்டிச்சுவராக்க முயல்கிறார்கள், எதிர்பவர்களை துரோகிகளாக்குகிறார்கள்... விளைவு மக்களின் தலையில் சுமையாக விழுகிறது....

நான் அதற்குப் பிறகு பேசவில்லை. பெரிய வெற்றிகளின் முன் சிறிய தவறுகள் பெரிதாக தெரியாது என்பது உண்மைதான். ஆனால் பெரிய வெற்றிகளை காட்டியபடியே தவறுகளை திட்டமிட்டுச் செய்வதை எப்படிப்புரியவைப்பது. இவருக்கு இதைவிளக்க முடியாது. விளங்கிக் கொள்ளவும் இவர் தயார் இல்லை. ஆனால் இதை எப்படியும் வரலாறு விளக்கும்.... இப்படி நினைத்துக் கொண்டு ஒரு நெடு மூச்சுடன் இன்னொரு சிகரட்டை எடுத்துப்பற்றவைத்தேன். நான் கேட்காமலே இம்முறை அவர் வேண்டாம் என்று கையைத் தூக்கினார்●

நன்றி - நூலகத்திட்டம்



# தொடர்பு ஊடக ஆணைக்குழு ஊறு விளைக்குமா?

- வால்கூங்க -



ஜனநாயகம் நிலவுவதாகச் சொல்லப்படும் மூன்றாம் உலக நாடுகளில் கூட பலம் வாய்ந்த தொடர்பு ஊடகங்கள் (Media) ஒன்றில் அரசின் கட்டுப்பாட்டிலோ அல்லது அரசின் உரிமையிலோ இருக்கின்றன. எனவே சுதந்திரமான செய்திப் பரிவர் த்தனை என்பது இந்த நாடுகளில் மாயையே. இலங்கையைப் பொறுத்தவரை 1970–77 காலப் பகுதியில் சிறிமா அரசு லேக் ஹவுஸ் பத்திரிகைகளைச் சுவீகரித்ததுடன் தொடர்பு ஊடகங்கள் மீதான நேரடி ஆதிக்கம் துவங்கிற்று என லாம். இன்று ரூபவாஹினியிலோ, வானொலியிலோ எவ் வகையான உண்மைச் செய்திகளையும் எதிர்பார்க்க முடியாது. நாட்டில் ஒரு புறம் கழுத்து வெட்டப்படுவதும், ஆட்கள் புதைபடுவதும் காணாமல் போவதும் நிகழ்ந்து கொண்டிருக்க ரூபவாஹினியோ அரசியல் வ்ாதிகள் பங்கு பெறும் நாடா வெட்டும் விழாக்களையும், அடிக்கல் நாட்டி மண் போடுவதையுமே திருப்பித் திருப்பிக் காட்டுகிறது.

எவ்வளவுதான் திறந்த பொருளாதாரக் கட்டமைப்பு இருந்தாலும் மூடப்பட்ட தகவல் ஊடகங்கள் இருக்கும் வரை 'சுதந்திரமான சமூகத்தை எவரும் கற்பனை செய்யக் கூட முடியாது. மேலும், தொழிநுட்பமும் தொடர்பு ஊடகம் சார்ந்த HI-TEC வசதிகளும் உன்னதமாக வளர்ந்துள்ள (ஃபக்ஸ், எலெக்ட்ரோனிக் மெயில், கொம்யூட்டர் தொடர்பு, செய்மதித்தொடர்பு) இந்த நூற்றாண்டின் 'தணிக்கை' அல்லது தகவல் பெறும் உரிமையிலிருந்து மக்களைப் பிரிப்பது என்பது முற்றிலும் முடியாத காரியம் என்பதை மூன்றாம் உலக நாடுகளின் ஒடுக்குமுறை அரசுகளும் ஜனநாயக விரோத அரசுகளும் உணராமலிருப்பதும் சிரமம் தான். இந்தப் பின்னணியில் தான் அனைத்துக் கட்சி மாநாட்டின் பரிந்துரையை அடியொற்றி அரசு கொண்டுவர இருப்பதாகச் சொல்லப்படும் தொடர்பு ஊடக ஆணைக்குழு மசோதா (media Commission Bill) முக்கியமாக நோக்கப்படவேண்டும்.

கொஞ்சம் கவனக் குறைவாக இருந்தாலும் என்றென்றைக்குமாக பத்திரிகை, மற்றும் தொடர்பு ஊடக சுதந்திரத்தை அரசு முற்று முழுதாகப் பறித்து விடுகிற அபாயமுண்டு. இந்த தொடர்பு ஊடக ஆணைக்குழு பற்றிய மசோதா விவரங்கள் இன்னும் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அண்மையில் ஜனாதிபதியின் ஆலோசகரான பிராட்மன் வீரக்கோனைச் சந்தித்த உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கே இது பற்றிய விவரங்கள் தெரிந்திருக்கவில்லை என்று சொல்லப்படுகிறது!

இந்த மசோதா இப்போது அமுலிலுள்ள பத்திரிகைக்கவுன்சில் சட்டத்தை (Press council act) பிரதியீடு செய்யும் என்று தெரிய வருகிறது.

மசோதா பற்றிய விவரங்கள் தெரிய வராமல் அபிப்பிராயங்களை 'சரிநிகர்' தெரிவிக்க முடியாது. எனினும் மசோதா விவரங்களை உடனடியாக மக்கள் முன்னும் பத்திரிகையாளர்கள் மற்றும் தொடர்பு ஊடகம் சார்ந்தோர் அனைவரது கவனத்துக்கும் அரசு கொண்டு வர வேண்டும். இம் மசோதா பற்றிய விவாதங்களுக்குச் சந்தர்ப்பமளிக் கப்பட வேண்டும்.

மசோதா எவ்வளவுதான் ஆரோக்கியமானதாக இருந்தாலும் தொடர்பு ஊடகங்கள் மீதான அரசின் அல்லது எவரினதும் கட்டுப்பாடு பத்திரிகை சுதந்திரத்தை ஊறு செய்யும் என்பதில் இன்னொரு கருத்து இருக்கமுடியாது!

# மொட்டந்தலையும் முழங்காலும்

- முனியாண்டி -

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தொடர்ச்சியாகப் பத்திரிகை வாசிப்பவருக்கு எழக் கூடிய அபிப்பிராயங்கள் இரண்டு:

ஒன்று: கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்பின் சூத்திரதாரியாகக் கருதப்படும் வரதன் ஒளிந்திருக்க மலையக மக்கள் முன்னணி உதவியிருக்கிறது என்பதும், எனவே ம.ம.முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நெருங்கிய உறவுள்ளது என்பதால் ம.ம.முன்னணிக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் சரியென்பது.

இரண்டாவது. இந்த மலையக மக்கள் முன்னணியுடன் சேர்ந்து ஸ்ரீ.ல.சு.கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டதுடன், தெற்கில் காணாமல் போன 60,000க்கும் மேற்பட்ட இளைஞர்களின் அன்னையரும், மனைவியரும் இணைந்து நடாத்திய அன்னையர் முன்னணிக் கூட்டத்திற்கு அழைத்து வந்து முக்கிய இடம் வழங்கியது.

கூடவே தேர்தலுக்கென ஸ்ரீ.ல.சு.க. ம.ம.முன்னணிக்குப் பெருந்தொகை பணத்தை வழங்கியுள்ளது என்றும், ம.ம.முன்னணி ஊடாகப் புலிகளைச் சென்றடைந்த அப்பணம் ஆயுதம் வாங்கப் பயன்பட்டுள்ளது என்றும் இதனால் ஸ்ரீ.ல.சு .கட்சி நாட்டையே காட்டிக் கொடுத்து விட்டது என்றும் இப்பத்திரிகைகள் புலப்புகின்றன.

இவ்வபிப்பிராயங்கள் வாசகர்களை இரண்டு முடிவுகளை நோக்கித் தள்ளி விடுகின்றன். முதலாவதாக ம.ம.முன்னணி ஒரு மலையப் புலி. எனவே அதற்கெதிராக எவ்வாறான நடவடிக்கையை எடுப்பதும் தவறல்ல என்கிற மனப் போக்கை உருவாக்கி விடுகிறது.

மற்றையது. இந்நாட்டின் நலனில் அக்கறையுள்ள அதற்கான அர்ப்பணிப்புள்ள ஒரேயொரு கட்சி ஐக்கிய தேசிய கட்சி மட்டுமே என்பது, கூடவே அதன் நட்புக்கட்சிகளையும் சேர்க்கலாம்.

இந்த முடிவுகளை நோக்கி வாசகர்களைத் தள்ளுவதற்கான திசையில் இந்தத் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு இவ்விடயங்களைக் கையாண்டுள்ளன என்பது தான் இங்கு முக்கியமானதே தவிர, இவை குறித்த தீர்ப்புகளை வழங்குவதல்ல எமது நோக்கம்.

இந்நாட்டின் ஜனநாயக நீரோட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ம.மமுன்னணி. மலையகத்தில் பெருமளவான மக்களால் ஆதரிக்கப்பட்டு வரும் கட்சி.

இவ்வாறான ஒரு கட்சி வி.புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதில் என்ன தவறு இருக்கக் கூடும்?.

ஸ்ரீ.ல.சு. கட்சி வி.புலிகளுடன் பேச் வன்னிக்குத் தூதனுப்பியதும், மாறாக அரசோ கொழும்புக்கு அழைத்து வந்து ஹில்டனில் வைத்து 14 மாதங்களாக பேசியதும் உண்மைகள் அல்லவா? இந்த இடத்தில் காதோடு காதாக இன்னொரு உண்மையையும் சொல்லி வைக்க வேண்டும். இந்தப் 14 மாத கால தேனிலவின் போது தான் த.வி.கூட்டணி தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஐச் சேர்ந்த சாம் தம்பிமுத்து எம்.பியும் சுட்டுக் கொல்லப்பட்டது. இக் கொலைகளைச் செய்தது வி.புலிகள் தான் என்பது அப்பட்டமாகத் தெரிந்திருந்தும் அவர்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்காதது மாத்திரமல்லாமல் அப்போதைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன "அவர்கள் இதனைச் செய்திருக்க மாட்டார்கள்" என்று மறுத்ததும் உங்களுக்கு ஞாபகம் வருகிறதல்லவா?

எனவே வி. புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதற்காக ம.ம.முன்னணி தலைவர்களை கைது செய்யலாம் என்றால் அவர்களோடு தொடர்பு கொண்டுள்ளதுமல்லாமல் அவர்களது தவறுகளை மூடிமறைத்து வக்காலத்து வாங்கியவர்களை என்ன செய்யலாம் என இந்தப் பத்திரிகைகள் ஏன் எழுதவில்லை? என்கிற கேள்வி எவருக்கும் இலகுவாகத் தோன்றக் கூடிய ஒன்றுதானே.

தவிர ம.ம.முன்னணி மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ம.ம.முன்னணி தனது அபிப்பிராயம் எதனையும் தெரிவிக்க முடியாதவாறு அதன் தலைவர் செயலாளர் உட்பட அனைவரும் கைது செய்து சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். என்பதுகூட இக்கைதுகளின் பின்னணி குறித்து கேள்விஎழுப்ப வைக்கிறது.

கூடவே இச்சம்பவங்களையொட்டி மலையகத்தின் பாதுகாப்பு என்ற பெயரிலும், மலையகத்தில் வெளிச்சக்திகளின் ஊடுருவலை தடை செய்து பயங்கரவாதிகளை கண்டு பிடிப்பதற்கு எனவும் பெருமளவான படையினர் குவிக்கப் பட்டுள்ளனர்.

இந்தப் படையினரால் கைது செய்யப்பட்டு தொந்தரவுக்கு உள்ளாக்கப் படுபவர்கள் பெருமளவில் அப்பாவி இளைஞர்களே. இவர்கள் ம.ம.முன்னணிக்கு ஆதரவளித்தார்கள் என்பதன் பேரிலேயே கைது செய்யப்படுகிறார்கள்.

90 மே 15 இல் ம.ம.முன்னணித் தலைவர் சந்திரசேகரன் எதுவித காரணங்களுமில்லாமல் கைது செய்யப்பட்டதும் ம.மக்களின் எதிர்ப்பையும் வேலை நிறுத்த அறைகூவலையும் அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டதும் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இதன் தொடர்ச்சியாகவே இன்றைய கைதுகளையும், அது தொடர்பான விடயங்களையும் புரிந்து கொள்ளலாமல்லவா?

அவ்வாறெனில் ம.ம.முன்னணிக்கெதிரான இவ்வாறான அழுத்தமான நடவடிக்கைகளைப் பிரயோகிப்பதன் பின்னணி என்னவாயிருக்கக் கூடும் என்கிற கேள்வி எழுகிறது.

முதலாவது ம.ம.முன்னணி இ. தொ. காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கட்சி. எனவே இதுகாலவரை நிலை பெற்றிருந்த இ. தொ. காவின் ஏகபோகத்திற்கு சவாலாக எழுந்து நிற்கிறது.

இதனால் இ. தொ. காவின் இதுகாலவரையான சமரச அரசியலும், காட்டிக் கொடுப்புகளும் சந்திக்கு வருகின்றன.

இரண்டாவது மலையகம் மலையக மக்களுக்கே என்கிற அதனது நிலைப்பாடு.

இது மலையக மக்களை வைத்துப் பிழைப்பு நடத்தியவர்களுக்கு மிக இக்கட்டான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இடத்தில் ஒன்றை நாம் சொல்லி வைக்கலாம். என்னவென்றால், எழுபதுகளின் ஆரம்பத்தில் தமிழர் உரிமைகள் தொடர்பாக எழுந்த கோரிக்கைகளை உதாசீனம் செய்து அவற்றை வன்முறையைக் கொண்டு முறியடிக்க முயற்சித்ததன் விளைவே அரசினதும், எதிர்க்கட்சினதும் ஏன் தென்னிலங்கையினதுமே இன்றைய திரிசங்கு சொர்க்க நிலை.

இதற்கு தமிழர் உரிமைகளை போராட்டங்களை வெறும் பயங்கரவாதமாக வர்ணித்த, இன்று வரை வர்ணித்து வருகின்ற இந்த தொடர்பு சாதனங்களும் ஒரு காரணம்.

இதே போல் மலையகமக்களும் தமது உரிமைகள் தொடர்பாக எழுப்பும் கோரிக்கைகளை நியாயமான வழியில் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றைப் பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டி வன்முறை கொண்டு முறியடிக்க முயற்சிக்குமாயின் இன்னொரு வட-கிழக்காக மலையகம் மாறுவதைத் தவிர்க்கவியலாது. என்பதை அரசும், இந்த நடுநிலைப் பத்திரிகைகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமிருந்த ஹோட்டேல்கள், புக்கிங் சென்டர்கள், மதுபானக் கடைகள் அனைத்தையும், சற்றும் எதிர்பாராத விதமாக திடீரென்று பொலிஸார் முற்றுகையிட்டனர். அங்கிருந்த 'ஜாக்பொட்' இயந்திரங்களை பலவந்தமாக பிடுங்கி ட்றக் வாகனங்களில் ஏற்றினர். கடைக்காரர்களும், பொதுமக்களும் 'ஜக்பொட்' பிரியர்களும் திகைத்து நிற்க அவற்றை வேகமாக எடுத்துச் சென்றனர்.

இச்சம்பவம் நடந்து மறுநாள் ரூபவாஹினியில் இந்த இயந்திரங்கள் உருளைகளால் நெரித்து அழிக்கப்படுவது காட்டப்பட்டது. நாடு முழுவதும் உள்ள 5000 இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் இன்னும் அவை தேடி எடுத்து அழிக்கப்படும் என்றும் பொலீஸ் அறிவித்தது.
இதன் பின் ஒரு வாரத்துக்குள் கொழும்பில் இயங்கும் அத்தனை கசினோக்களையும் மூடி விடும்படி அரசு உத்தரவு பிறப்பித்தது.

'இது எல்லாம் என்ன? நடப்பது கனவா நனவா?' என்ற திகைப்பு பொதுமக்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதில் ஆச்சரியம் இல்லை. அத்தனை வேகம், அத்தனை ஒழுங்கு. ஆனால் இது ஏன் செய்யப்பட்டது என்பது தான் யாருக்கும் புரிய வில்லை.

நமது கலாசாரத்தைப் பாதிக்கும் என்றும், சட்டவிரோத செயல்களின் மையமாக செயல்படுகின்றன என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட காரணத்தை யாரும் நம்பத் தயாராக இல்லை.

எப்படி நம்ப முடியும்? இதே யூ. என். பி. ஆட்சியாளர்கள் தான் 'ஜாக்பொட்' இயந்திரங்களை இறக்குமதி செய்தவர்கள். இவர்கள் தான் ஐந்து நட்சத்திர ஹோட்டேல்களிலும், தனியாகவும் கசினோக்களைத் திறக்க அனுமதித்தவர்கள். எதிர்க் கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்களின் மத்தியில் அவர்கள் இதைச் செய்த போது சொன்ன காரணம் 'பணம் சேரும்' என்பதே! இற்றை வரை அவர்களுக்கு இல்லாதிருந்த கலாசாரம் மற்றும் அம்சங்கள் பற்றிய அக்கறை இப்போது திடீரென ஞாபகத்துக்கு வரக் காரணம் என்ன?

"ரஞ்சன் விஜேரத்தினாவை கொலை செய்தது கசினோக் காரங்கள் தான். அவங்களுக்கும் புலியளுக்கும் தொடர்பு இருக்கும். சர்வதேச மஃபியாக் காரங்கள் வந்து போகிற இடமாகி விட்டது தானோ இந்தக் கசினோக்கள். அது தான் அரசு இப்படிச் செய்திருக்கிறது" – இது கொட்டாஞ்சேனையில் உள்ள ஒரு 'ஜாக்பொட்' வாடிக்கையாளரின் அபிப்பிராயம்.

'ஆனாலும் அரசாங்கம் இன்னும் குதிரை ரேஸை தடை செய்யேல்லை. அது லேசிலை நடக்காது. முந்தி ஒருக்கால் ட்றை பண்ணினவங்க தானே சரி போகேல்லை. எல்லா புக்கிங் முதலாளியளும் யூ. என். பி. புள்ளியள்... அதாலை பயமில்லை. ஜாக்பொட் ஒண்ணும் அவ்வளவு முக்கியமான சாமான் இல்லை... கசினோ போனது ப ரவாயில்லை. அது பெரியாக்களோட இடம் தானே..." இது இன்னொரு ஜக்பொட் பிரியர் தரும் தகவல்.

உண்மையில் இவற்றை நிறுத்தியதற்கான காரணம் இன்று வரை புதிராகத் தான் இருக்கிறது.

'அந்தச் சிங்கப்பூர் கசினோக் காரனை நாடு கடத்தினதால் அரசாங்கத்துக்கு சேர வேண்டிய பங்கை குடுக்காம போனாங்களோ என்னவோ. இந்த கசினோக்காரங்க' என்பது இன்னொருவர் அபிப்பிராயம்.

உண்மையில் அரசுக்கு சூது, காமக்களியாட்டம் போன்றவற்றைத் தடை செய்யும் விருப்பமும், அக்கறையும் திடீரென்று ஏற்பட்டு விட்டது தானோ என்னவோ.... கடவுளுக்குத் தான் தெரியும்!

ஆனால் ஒன்று மட்டும் சொல்லலாம். அரசுக்கு அந்த விருப்பமும் அக்கறையும் முற்று முழுதாக இல்லை.

ஏனென்றால் அரசு தானே சூதாட்டத்திற்கென தனியான ஒரு டிப்பார்ட் மெண்டையே உருவாக்கி வைத்திருக்கிறது. அது தான் 'தேசிய லொத்தர் சபை' என்கிறார் ஒரு பெரியவர்.

உண்மை தான்! கொழும்பு புறக்கோட்டையில் எந்த மூலைக்கு நீங்கள் போனாலும் அத்தனை வாகன சன நடை பாதை வியாபார சந்தடிகளையும் மீறி காதில் விழுந்து கொண்டிருக்கும் ஒரே குரல் 'வாசனாவ... அதிர்ஷ்டசாலியாகுங்கள், அதிர்ஷ்டசாலியாகுங்கள் எனக்கூறி அழைக்கும் டிக்கட் விற்பனையாளர்களின் குரல் தான். சுரண்டி ஸ்தலத்திலேயே அதிர்ஷ்டம் பார்க்கும் டிக்கட் முதல் வெள்ளி தோறும் குலுக்கும் மகாஜன சம்பத், சனியன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் 'சனிதா வாசனாவ' வரை எத்தனை ரகமான டிக்கட்டுகள் தான் விற்பனையாகின்றன. புள்ளடி போடுவது முதல் சுரண்டுவது வரையான இந்த டிக்கட்டுக்களின் விற்பனை பற்றி ஒரு பையனிடம் விசாரித்தோம்.

"நிறையப் பேர் வாங்கிறாங்க, வேலை முடிந்து போறவங்க நிச்சயம் ஏதாவதொன்று வாங்கிட்டுத் தான் போவாங்க வெள்ளிக் கிழமையில் மகாஜன சம்பத, சனிதா வாசனாவ டிக்கட்டுகள் நிறையப் போகும். அன்னைக்கெல்லாம் எனக்கு நிறைய கொமிஷன் கிடைக்கும். கூறி விட்டு "எதுங்க எடுக்கிறீங்க...." என்றான் அவன்.

'எது அதிகம் விற்பனையாகும் டிக்கட்?....'

'எல்லாமே போகுதுங்க, மகா ஜன சம்பத் டிக்கட் எடுங்க, இந்தக் கிழ மை நுப்பது லட்சம் ரூபா, திஸ் லக்சயக் மாத்தயா' என்று எம்மிடம் ஒரு டிக்கட்டைத் திணித்தான்.

'ஒரு நாளைக்கு எத்தினை டிக்கட் விப்பாய்?'

'அநேகமாக நூறு நூத்தம்பது.... மத்தப் படி கொஞ்சம் போல குறையும்.

'சராசரியாக எத்தனை டிக்கெட் விப்பாய்?'

'ஒரு ஆயிர.' ஆயிரத்தைநூறு ரூபாக்கு விப்பேன்.

அதிக நேரம் பேசி மினைக்கடத் தயாரில்லாமல் அவன் ஓடினான், 'வாசனாவா....'

ரீவியை முறுக்கினாலும் சரி, றேடியோவைப் போட்டாலும் சரி லொத்தர் விளம்பரங்கள்... பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள். தேர்ந்த சந்தைப்படுத்தல் நிபுணர்களின் திட்டமிட்ட விளம்பரம் மற்றும் விநியோக ஒழுங்கு முறைப்படி இவை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் விற்கப்படுகின்றன. கவர்ச்சியான பிரச்சாரங்களினூடாக இலங்கைப் பிரஜை ஒவ்வொருவனது காதுகளிலும் ஒரு நாளுக்கு குறைந்தது ஒரு தடவையாவது இது திணிக்கப்படுகிறது. இதன் மூலம் மக்கள் மத்தியில் அதிர்ஷ்டம் பற்றிய பிரச்சினைகள் திட்டமிட்டு புகுத்தப்படுகின்றன. நாட்டின் அபிவிருத்திக்கென இந்த லொத்தர்கள் நடாத்தப்படுவதாக பிரச்சாரம் செய்வதன் மூலம் ஏமாற்றிப் பணம் பறிக்கப்படுகிறது. பகற்கொள்ளையின் ஒரு வித நவீன வடிவம் இது என்று சொல்லலாம். சிலவேளைகளில் இரண்டு, மூன்று மில்லியன் ரூபாய்கள் பரிசாகக்கிடைக்கின்றன எனப்பிரச்சாரம் செய்யப்படும் போது ஒவ்வொருவரும் தாம் லட்சாதிபதியாகி விடும் ஆசைக்குள்ளாக்கப்படுகிறார்கள். அதிர்ஷ்டம் ஒருவனுக்கே என்ற போதும் அந்த ஒருவன் தானாகவும் இருக்கலாம் என எண்ணத் தலைப்படுகிறார். சுலபமாகப் பணம் சம்பாதிக்கும் ஆசை ஊட் டப்படுகிறது. தேசத்தில் உழைப்பிற்கு ஊக்கம் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக அதிர்ஷ்ட நம்பிக்கை வளர்க்கப்படுகிறது. சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை இந்தப் பகிரங்க அரச சூதாட்டத்தில் மயங்காதவர் இல்லை என்றே சொல்லலாம்.

உதாரணமாக ஆறு இலக்கங்களை கொண்ட மகாஜன சம்பத லொத்தரை எடுப்போம். இதன் முதற் பரிசான பத்து லட்சம் ரூபா பரிசு ஒருவருக்கு மட்டுமே விழும். ஆறு இலக்கங்கள் இருப்பதால் பத்து லட்சம் டிக்கட்டுகள் அச்சடிக்கப்படுகின்றன. ஒரு டிக்கட்டின் விலை பத்து ரூபா. (முழு டிக்கட்டுகளும் விற்கப்பட்டால் விற்கப்பட்ட மொத்தத் தொகை நூறு லட்சம்!) முதற் பரிசாக பத்து லட்சம் ரூபாவைப் பெறுவர் பத்து லட்சத்தில் ஒருவர் தான்! டிக்கட்டுகள் முழுவதும் விற்கப்படாமல் இருந்தாலும் பரிசு பெறுவதற்கான நிகழ்தகவு பத்து லட்சத்தில் ஒன்று தான்! இதில் ஒருவர் பரிசு பெற டிக்கட் வாங்குகிற பலலட்சக் கணக்கானோர் சுரண்டப்படுவதை யாரும் கணக்கெடுப்பதில்லை. பத்து லட்சம் ரூபா பரிசு வழங்கப்படுவது பற்றியே கதைப்பவர்கள் யாரும் மீதி முழுவதும் சுரண்டப்படுகிறது அபகரிக்கப்படுகிறது என்று கருதுவதில்லை. உதாரணமாக பரிசாக வழங்கப்படுகின்ற தொகை மஹாஜன சம்பதவில் 26 லட்சம் ரூபாக்களே. அதாவது முழுப் பரிசில்களையும் சேர்த்து! நூறு லட்சம் ரூபா விற்பனையில் 26 லட்சம் பரிசாகப் போவதை கவனிக்கும் யாரும் மீதி 74 லட்சம் சுருட்டப்படுவதைப் பற்றிக் கவனிப்பதில்லை. இது தான் சூதின் வெற்றி. இங்கே அதிர்ஷ்டம் என்ற பொய்யான ஒரு கருத்தை வைத்து பகற்கொள்ளை அடிக்கப்படுகிறது என்பதே உண்மை!

கணனிகள் மூலம் திட்டமிட்டு லாபம் பெறும் விதத்திலேயே தயாரிக்கப்படும் இந்த டிக்கட்டுக்களின் மூலம் நீங்கள் கோடீஸ்வரராகலாம், லட்சாதிபதியாகலாம்! அழகான காரொன்றின் சொந்தக்காராகலாம்! அல்லது தேசத்தின் அபிவிருத்திக்கு ஒரு பத்து ரூபாயைச் செலவழித்த திருப்தியைப் பெறலாம் என்று பிரசசாரம் செய்து கோடி கோடியாக கொள்ளை அடி க்கப்படுகிறது. இது ஒரு குத்து மதிப்பே.

உண்மைக் கொள்ளை இன்னும் அதிகமாகலாம் இது வெறும் லொத்தர் மூலம் என்றால் மொத்தக் கொள்ளையைக் கணக்குப் பாருங்கள்!

நாட்டை அரசு கொள்ளையடிக்கிற விதம் தெளிவாகப் புரியும்!

வருமானவரி கட்டும் அளவை விட வருமானம் குறைந்த தமது உழைப்பு போதாமையால் வாடுகிற ஏழை மக்களுக்கு அரசின் இந்தப் பிரச்சாரம் வாழ்க்கையில் முன்னேறும் அதிர்ஷ்ட நம்பிக்கையைத் தூண்டுகிறது. தமது துன்ப துயரத்திலிருந்து விடுபட அவர்கள் லொத்தரை நாடுகிறார்கள். ஒரு வாரம் குறைந்தது பத்து ரூபா வீதம் ஆண்டொன்றுக்கு 520 ரூபாவை அவர் இதில் இழக்கிறார். வசதி குறைந்த கஷ்டப்பட்ட மக்களது வயிற்றிலடித்து வரிக்குப் பதிலாக இப்படிப்பட்ட கொள்ளை மூலமாக பணத்தை அபகரித்து அபிவிருத்தி செய்வதாகக் கூறுவதைவிட பாசாங்கு வேறு என்னவாக இருக்க முடியும்?

இப்படிப் பார்க்கும் போது தான் தெரிகிறது அரசினரா கசினோக்காரர்களா மோசமான கொள்ளையர் என்பது.

கசினோவாவது மிக மிக வசதி படைத்தவர்களை மட்டுமே சுரண்ட முடியும்! ஆனால் லொத்தரோ முழுத் தேசத்தையே சுரண்டுகிறது!

எம்மையறியாமலே பத்துப் பத்தாகப் பணம் பறிக்கிற அரசின் சுரண்டலைப் பற்றி யோசிக்கும் போது ஒரு தமிழ்ப்பழமொழி ஞாபகம் வருகிறது.
அள்ளுவாரோடு இருக்கலாம், கிள்ளுவாரோடு இருக்கேலாது.



நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்



## படுகொலைகளின் தேசம்

### கொக்கட்டிச்சோலை படுகொலைகள்:

சந்தோசகரமான நாட்களில் கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பின் கட்டித்தயிருக்குப் பேர் பெற்றது. இந்தக் கட்டித் தயிருக்காகவே மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்குப்புறமாக ஆறு மைல்கள் யாத்திரிகர்கள் பயணிப்பர். கல்முனை வீதியால் சென்று காத்தான்குடி, ஆரைப்பற்றை கிராமங்களருகே வலப்புறமாகத் திரும்பி ஒல்லிக்குளம் என்ற முஸ்லிம் கிராமத்தூடாக மண்முனைத் துறைக்கு வந்து வாவியைக் கடந்தால் கொக்கட்டிச் சோலை.

இன்றைக்கு ஒல்லிக்குளம் பாழடைந்த கிராமம். மண்முனைப் "பாதை"யும் செயலிழந்து போயிற்று. நிர்ச்சலனமான காலைப் பொழுதுகளில் கட்டு மரங்களில் வாவியைக் கடப்பது மனதை விட்டகலாத அழகுதான்.

பூர்விகக் கதையின்படி கொக்கட்டி மரங்கள் நிறைந்திருந்தமையால்தான் கொக்கட்டிச் சோலை என்று பெயர் வந்தது என்கிறார்கள். கொக்கட்டி மரத்தின் சாறு குருதிச் சிவப்பாம்.

துறையடியிலிருந்து ஒன்றே கால் மைல் தூரம் நடந்தால் தூர்ந்து போன றால் பண்ணை. ஜனவரி 1987 இல் விசேட அதிரடிப்படையினர் இங்குதான் பலரைப் பலி எடுத்தார்கள். அன்றிலிருந்து கிட்டத்தட்ட நூற்றிருபது பேர் வரையில் கொக்கட்டிச் சோலையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

றால் பண்ணைக்கு அப்பால் முதலைக் குடா மெதடிஸ்த ஆலயமுள்ளது. தெற்குப் புறமாக தெரு மகிழடித்தீவு நோக்கிச் செல்கிறது. வடக்குப்புறப் பாதை முதலைக்குடாவின் பிரதான பிரதேசங்களுக்குச் செல்கிறது. (முதலைக்குடா காரணப் பெயர்; இங்குள்ள முதலைகள் ஆட்கொல்லிகள் அல்ல எனச் சொல்லப் படுகிறது) தெருவில் நேரே சென்றால் ராணுவமுகாம்.

பட்டாளத்துக்குச் சாப்பாடு வருகிற போதெல்லாம் ஒரு சிறுகடையணி உள்ளூர் ட்ரக்டர் ஒன்றைச் சாய்த்துக் கொண்டு துறையடிக்குச் செல்லும். தெருக்கரை ஓரமாக ஒரே சென்றிகள்தான். மெதடிஸ்த ஆலயத்தடியில் மட்டும் ஆறுபேராவது நிற்பார்கள். இது வழமையான 'ஒப்பரேஷன்' என்பதால் பட்டாளத்தான்களுக்கு எந்த நேரமும் ஆபத்திருந்தது.

ஜூன் 12 ஆம் திகதியும் வழமை போலவே பட்டாளத்தான் துறையடிக்கு வந்தார்கள். கண்ணிவெடி; ட்ரக்டரிலிருந்த இரண்டு ராணுவத்தினர் மாண்டனர். நேரம் பிப 12.45. கண்ணி வெடியைத் தொடர்ந்து மேலும் பட்டாளத்தார் வெடித்த இடம் நோக்கி நகரத் தொடங்கினார்கள். கொக்கட்டிச் சோலை ராணுவ முகாமில் அண்மையில் PLOTE இலிருந்து வெளியேறிய பத்துத் தமிழ்த் தீவிரவாதிகளும் இருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் அவ்விடத்தைச் சார்ந்தவர்களாகவும் மனைவி, பிள்ளைகள் இருப்பவர்களாகவுமிருந்தனர். இந்தத் தீவிரவாதிகளும் சம்பவம் நடந்த இடத்திற்கு பட்டாளத்தாருடன் சென்றார்கள். ஆனால் பட்டாளத்தார் அவர்களுடைய ஆயுதங்களைப் பறித்தெடுத்த போதே அவர்களுக்குப் புரிந்தது பொதுமக்களைப் பட்டாளத்தார் பழிவாங்கப் போகிறார்கள் என்று. கொக்கட்டிச் சோலைக்குச் சென்று மக்களை ஓடிவிடுமாறு இவர்கள் சொன்னார்கள்.

கண்ணிவெடிச் சத்தம் கேட்ட போது சிவப்பிரகாசம் திசைவீரசிங்கம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தொடர்ந்தும் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்கவே எழுந்து மகிழடித்தீவு எல்லைவரை ஓடிச் சென்று விட்டார். சனங்கள் ஓடுவதையும் துப்பாக்கிகளால் சுட்டபடி ராணுவத்தினர் அவர்களைத் துரத்துவதையும் அவரால் காண முடிந்தது. மேலும் முக்கால் மைல் ஓடிச் சென்ற பிறகு கிராமத்தின் மேல் நெருப்பு எழுவதை அவர் பார்த்தார். திசைவீரசிங்கத்தின் வீட்டிலிருந்து கொஞ்சத் தூரத்தில் குருகுலசிங்கத்துக்குச் சொந்தமான ஒரு மில் இருந்தது.

மகிழடித்தீவைச் சேர்ந்த நிறைய பேர் ஓட விரும்பாமல் இந்த மில்லினுள் போய்ச் சேர்ந்தார்கள். மில்லுக்கு அருகே உள்ள இன்னொரு வீட்டிலும் ஏறத்தாழ நூறுபேர் இவ்வாறு சேர்ந்திருந்தார்கள். வீட்டினுள் இருந்தவர்கள்; குருகுலசிங்கம் அவருடைய மனைவி புவனேஸ்வரி, குழந்தைகள் ரூபவதனி (6 வயது), நிஷாந்தன் (5 வயது), சுகந்தன் (3 வயது), விவேகானந்தன் (8 மாதம்), கொக்கட்டிச் சோலைப் புறமிருந்து வந்த ராணுவத்தினர் வீட்டிலுள்ளோரையும் மில்லிலிருந்தோரையும் நோக்கிச் சுட ஆரம்பித்தார்கள். வீட்டின் சுவரில் நான்கு குண்டு துளைச்சல்களைக் காணக் கூடியதாக இருந்தது. வீட்டிலிருந்த அனைவருமே கொல்லப்பட்டார்கள். மில்லிலிருந்த அனைவருமே கொல்லப்பட்டார்கள். மில்லிலிருந்த பெரும்பாலோனோர் படுகாயமடைந்தார்கள். நல்ல தம்பி சுப்பிரமணியம் (80 வயது) என்பவரையும் போகிற வழியில் படையினர் சுட்டுக் கொன்றார்கள்.

→ பக்கம் 6 இல்

மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்), ஒகஸ்ட் 28 ஆம் திகதி வெளியிட்ட எட்டாவது அறிக்கையிலிருந்து சில பகுதிகளை மொழி பெயர்த்துத் தருகிறோம். "பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று பாரதி சொன்னது இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்திப் போகிற அவலம் இங்கு!

### ஏறாவூர் முஸ்லிம் படுகொலைகள்:

"எனக்கு ஆண்டவன் அளித்துள்ள விசித்திரமான சிறப்பியல்பு காரணமாகவோ என்னவோ, இத்தினைக்கும் பிறகும் கூட என்னால் இப்படி இருந்து பேச முடிகிறது ......" என்றார் அவர். அவர் ஒரு முஸ்லிம் புத்திஜீவி.

தனது குடும்பத்துக்கு நடந்த துயரத்தைக் கூறுவதற்கு முன்பாக, அவர் தெரிவித்த சில தகவல்கள் இவை; "எனது தகப்பனார் ஒரு நல்ல பண்புகள் உள்ள மனிதர். அயலிலுள்ள தமிழ் கிராமத்தில் அவருக்கு கொஞ்சம் வயல்கள் இருக்கின்றன. எனது மாமனாருக்கோ ஒரு கடை இருக்கிறது. புலிகளது முகாம் எனது வீட்டிற்கு மிக அண்மையில் இருந்தது.

எனது தம்பியார் பல வருடங்களுக்கு முன் புலிகளின் இயக்கத்தில் சேர்ந்திருந்தார். அந்த நேரத்தில் அவருக்கு அது ஒருவகை 'திறில்', கிட்டத்தட்ட 100 பேர்வரை அக்காலத்தில் ஏறாவூரிலிருந்து புலியில் சேர்ந்திருந்தார்கள். இவர்களில் அனேகமானோர் இந்தியப்படையினர் அங்கு இருந்த போது சேர்ந்தவர்கள். எனது தம்பியார் புலிகளில் மாணவர் இயக்கத்தின் (SOLT) மட்டக்களப்பு மாவட்ட தலைவர் ஆகவும் உயர்ந்திருந்தார். ஏறாவூர் கிட்டத்தட்ட புலிகளின் கோட்டை என்றே சொல்லலாம். ஆனால், அதேவேளை, முஸ்லிம் மக்களுடைய முக்கியமான அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் மேலும் மேலும் குழப்பப்பட்டும் வந்ததை நான் அறிந்தே இருந்தேன். ஆயினும் நாம் ஒரு போதும் முஸ்லிம் கொங்கிரசிற்கு ஆதரவு அளித்தது கிடையாது. நான் புலிகளின் முகாமுக்குச் சென்று அங்கு வருகிற பிராந்தியப் பொறுப்பாளரிடம் பல தடவை பேசியிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை அரசியலில் அவர் எதுவும் அறியாத ஒருவராகவே இருந்தார். அவருக்கு எது சொன்னாலும் 'ஏறுவதில்லை'. அப்போதே நான் விரைவில் பாரிய அழிவுகள் தலைதூக்கக் கூடும் எனப் புரிந்து கொண்டேன். காசோ, சாப்பாடோ, எதுவேணுமானாலும் சரி, அவர்கள் ஏறாவூரிலிருந்து பெறக் கூடியளவு பெற்றுக் கொண்டிருந்தார்கள். யுத்தம் தொடங்க இரண்டு மாதங்களுக்கு முதல், (ஏப்பிரல் 1990) எனது மைத்துனர் வீட்டுக்கு புலிகளைச் சேர்ந்த சிலர் வந்தார்கள். றம்ழான் பண்டிகைக்காலம் அது. நாங்கள் 40 பேருக்கு சாப்பாட்டுப் பார்சல்கள் கொடுத்தோம். இதிலே முக்கியமான இன்னொருவிடயம் காத்தான்குடிப் படுகொலைக்குப் பிறகும் கூட (ஒகஸ்ட், 3) ஏறாவூர் எந்தச்சிக்கலும் இல்லாமல் அமைதியாக இருந்தது.

→ பக்கம் 12 இல்

### இம்பீச்மென்ற் என்றால்...

இம்பீச்மென்ற் (impeachment) என்றால் என்ன அது
இம்பீச்மென்ற்?
எனக்குப் புரியவில்லை; உங்களுக்கு?
நெறி பிறழ்ந்து விட்டாராம் அனாதிபதி!
லலித்தும் காமினியும் சொல்கிறார்கள்
கூடவே கொஞ்சப்பேர் நீதிகளும்.

என்னிடம் ஒரு கேள்வி;
என்றைக்காவது இருந்ததா நெறி
பிறழ்வதற்கு?

எனக்கு ஞாபகம் புட்போலில் கால் தூண்டு
நெறி போட்டது நான்.

அது சரி இம்பீச்மென்ற் என்றால் என்ன அது
இம்பீச்மென்ற்?

நீலம் போய் பச்சை வந்தது;
இனி பச்சை வெடித்த எதுவப் போகிறது?

நூலகத்திற்கு நெருப்பு போட்டது காமினி!
மிச்சத்திற்கு குண்டு போட்டது லலித்!!
இப்படி எல்லார் கைகளிலும் ரத்தம்
பச்சை ரத்தம்!!!

அதைத் தவிர ஒன்றுமில்லை
யாழ்ப்பாணத்தில் மின்சாரமில்லை
பெற்றோல் இல்லை; மண்ணெண்ணெய் இல்லை
மெழுகு திரியில்லை; பின்னை இராகுமில்லை
அரிசி இல்லை; சீனி இல்லை; மாவுமில்லை
ஆஸ்பத்திரியில் மருந்தில்லை

நீங்கள் தாளோங்கியபடி இருக்க மட்டும்
ஒன்றும் இருக்காது

அது சரி இம்பீச்மென்ற் என்றால் என்ன அது
இம்பீச்மென்ற்?

வாசகர்க்கு!
தவிர்க்கவியலாத காரணங்களால் இவ்விதழ் எதிர்பார்க்க முடியாதளவு தாமதமாகிவிட்டது. அதற்காக மன்னிப்புக் கோருகிறோம். உங்கள் கோபத்தைக் கொஞ்சம் தணிப்பதற்காக பக்கங்களை 16 ஆக்கி உள்ளோம் [illegible]!
ஆப்.

சரிநிகர் மாத இதழ் இல 6, அலோசாலை, கொழும்பு 3. இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால் கொழும்பு 10 ...